Vol. XXVII 1952—1953

# செந்தமிழ்ச்செல்வி

திங்கள் வெளியீடு

இருபத்தேழாம் சிலம்பு

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
லிமிடெட்.

வள்ளுவர் ஆண்டு
௧௯௮௩—௧௯௮௪

The South India Saiva Siddhanta Works
Publishing Society, Tinnevelly, Ltd.
Thirunelveli. :: Madras.

[All Rights Reserved]

'செந்தமிழ்ச் செல்வி'

## இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்

## EDITORIAL BOARD MEMBERS


க. திரு. மகாமகோபாத்தியாய பண்டிதமணி, மு. கதிரேசச் செட்டியார் அவர்கள், மகிபாலன்பட்டி.

உ. ,, 'சித்தாந்த கலாநிதி' வித்துவான், ஔவை சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள்,
தமிழ் விரிவுரையாளர், தியாகராயர் கல்லூரி, மதுரை.

ங. ,, துடிசைகிழார், அ. சிதம்பரனார் அவர்கள்,
கோயமுத்தூர்.

ச. ,, தி. சு. கந்தசாமி முதலியார் அவர்கள், எம். ஏ.,
வழக்குரைஞர், சாத்தூர்.

ரு. ,, வித்துவான், மு. இராசாக்கண்ணனார் அவர்கள்,
B.O.L. (Hons.) M.E.S., அரசினர் கல்லூரி, சென்னை.

சு. ,, வித்துவான், பண்டித, கா. போ. இரத்தினம் அவர்கள், பி. ஏ. (ஆனர்ஸ்), பி. ஓ. எல்.
அரசினர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி, கொழும்பு.

எ. ,, 'சித்தாந்த பண்டிதர்' ப. இராமநாத பிள்ளை அவர்கள்,
கழகப்புலமையாளர்.

# உள்ளுறை

பக்கம்

அண்ணாமலை மன்றம்—இதழாசிரியர் ௩அ௭

அதியன் அன்புக் கொடை—நாஞ்சில், கா. கணபதி ௩௫அ

அறிகிலேன் அன்னாய்!
—செல்வி எஸ். கமலா தேவி, இரத்தினபுரி ௬௫

அன்பு—செல்லூர்க்கிழார்
திரு. செ. ரெ. இராமசாமி பிள்ளை ௩௫௩, ௪0௬

ஆட்சிமொழி மாநாடு—டாக்டர், கணியர்,
இ. மு. சுப்பிரமணிய பிள்ளை ௧௧௩, ௧௧௬

இந்தியச் சாசனங்கள்—டாக்டர்,
திரு. மா. இராசமாணிக்கம், M.A., L.T., M.O.L (Ph.D) ௨0௧

இரங்கலுரைகள்—தமிழ்ப்பேரறிஞர் பலர் அ௧

இரங்கற்பா—திரு. இராம. சிவநேசன் ௩௧அ

இரங்கற்பா—திரு. புலவர் அரசு ௪௭௩

இரங்கற் பாக்கள்—மறைமலையடிகள் ௩௫௧

இலக்கிய விமர்சனம்—பேராசிரியர்,
ஜி. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ., பி. எல். ௫௩௭

இலங்கை சுற்றினேன்
—செல்வி, C. தேவி, M. Sc., நாகர் கோவில் ௪௪௬, ௫௧௨

இன்பமெனும் ஊற்றெடுக்கும்—தமிழவேள் ௪௫

இன்றியமையாச் செந்நெறித் தொண்டு
—திருவண்ணாமலை ஆதினத்தார், குன்றக்குடி. ௬

உணவின்றி உயிர்வாழும் வியப்பு—இதழாசிரியர் ௧அ௭

உலகமெய்ந்நெறி—இதழாசிரியர் ௪அ௧

உவமைச் சிறப்பு
—வித்துவான், திரு. கோ. பாலசுந்தர நாயகர் ௩0௫

உள்ளிருள் நீக்கும் ஒளி விளக்கு
—திரு. ப. இராமலிங்கன், குடியேற்றம் ௩௨௫

உன் எண்ணம் என்னே ?—வித்துவான்,
திரு. தி. மு. சங்கரலிங்கம், திருவாமாத்தூர். ௫௭௦
எல்லோர்க்கும் கொடுமதி
—திரு. ப.இராமலிங்கன், குடியேற்றம். ௨௭௭
எழுச்சிகொள் தமிழா !—நாகை வேலன் ௩௫௨
ஒப்பில் ஒருவர் டாக்டர் இரா. க. சண்முகம் செட்டியார்
—இதழாசிரியர் ௯௭
ஓநாயின் சாவு—திரு. முதுகண்ணன் ௧௬௬
கடவுள் உண்டா ?—இதழாசிரியர் ௧௫௩
கண்ணகிப் பெயர்க் காரணம்
—வித்துவான், திரு. ஆ. சிவலிங்கனார், மயிலம் ௨௯௫
கல்வெட்டுதவி—திரு. ஒளவை. சு. துரைசாமிப் பிள்ளை ௩௫
கவிதையின் இயல்பு
—தென்னாப்பிரிக்கா, டர்பன், திரு. ச. மு. பிள்ளை ௧௬௯
காட்சியும் கருத்தும்
—திரு. கா. கோவிந்தன், எம். ஏ., திருவத்திபுரம் ௨௨௯
காரைக்காலம்மையார்—திரு. வா. இராமலிங்கம் பிள்ளை ௫௩௪
கானகத்திலே காதல்—திரு. மா. இளங்கோவன் ௫௫௭
கிளியோட்டுத லறியாள்—திரு. மா. ரா. இளங்கோவன் ௪௧௪
குமரியாறு இருந்ததா ?—திரு. திருமந்திரமணி,
துடிசைகிழார், அ. சிதம்பரனார் ௧௭௬
குறும்பு—திரு. பி. லூர்துசாமி, பி. எஸ்ஸி. ௨௦௯
கையறு நிலைப்பா—நாஞ்சில், திரு. கா. கணபதி ௪௫௬
கொரியாப் போர் வரலாறு—இதழாசிரியர் ௫௭௨
கோசர்—திரு. புலவர், கா. கோவிந்தன், எம். ஏ. ௪௫௭
சங்க நூல்கள் தரும் செய்திகள்—திரு. பி. எல். சாமி ௧௪௧
சண்முகம் செட்டியாரவர்களின் பேரா இயற்கை
—இதழாசிரியர் ௩௮௫
சிந்தாமணியில் முன்னும் பின்னும்
—திரு. சுந்தர குமரன், கல்வே கல்லூரி, புதுவை ௮௬
சிறுகோட்டுப் பெரும்பழம்—திரு. க. குமரன், குடியேற்றம் ௩௪௫

சிற்றுயிர்க் குற்றதுணை—வித்துவான்,
திரு. ந. சண்முக சுந்தரன், திருவதிகை. ௩௧௯
சுந்தரத்தம்மையார் பிரிவு—இதழாசிரியர் ௧
செய்திகளும் குறிப்புக்களும்— ௪௬, ௯௬, ௧௪௭, ௧௯௦, ௨௩௮,
௨௮௫, ௩௩௦, ௩௭௯, ௪௨௯, ௪௭௭, ௫௨௫, ௫௭௪
சேலை திரு. சகதேவர் பிரிவு—இதழாசிரியர் ௫௨௯
தமிழக எல்லை—இதழாசிரியர் ௧௯௩
தமிழமுதம்—தென்னாப்பிரிக்கா-டர்பன், திரு. ச. மு. பிள்ளை ௪௮௬
தமிழர் அடிப்படை அறங்கள்
—செல்லூர்க்கிழார் திரு. செ. ரெ. இராமசாமி பிள்ளை ௩௦௯
தமிழ்நாட்டு விளையாட்டு-5. நொண்டி.
—திரு. ஞா. தேவநேயன் ௧௨௫
தமிழ் நெடுங்கணக்கு-பெயரும் எண்ணும்—இராவ்சாகிப்
சைவப்புலவர், டாக்டர், தி இரா. அண்ணாமலைப் பிள்ளை,
L. C. P. S., L. M. S. S. A., (Lond)
திருக்குற்றாலம், தென்காசி. ௧௯, ௧௬௧
தமிழ்ப் புலவர் மாணவர் தேர்வு-தென்னிந்திய தமிழ்ச்சங்கம் ௧௮௯
தவ இருக்கைத் தமிழ் முனிவர்—இதழாசிரியர் ௨௮௯
திருக்குறளைப் பரப்பும் சீரிய வழிகள்—இனியன் ௨௮௧
திருக்குறள் சொல் அடைவு—இதழாசிரியர் ௪௯
திருக்குறள் மாநாட்டுத் தலைமையுரை—வித்துவான் பண்டிதர்
திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள், எம்.ஏ.பி.ஓ.எல். ௫௦௫
திருக்கோவில் வழிபாடு
—சித்தாந்தபண்டிதர், திரு. ப. இராமநாத பிள்ளை ௨௬௭
திருக்கோவையார் ஆராய்ச்சி—சித்தாந்த பண்டிதர்,
திரு. ப. இராமநாத பிள்ளை ௩௩௯, ௪௦௧, ௪௯௭, ௫௪௪
திருப்பாசுரப் பேருரை விளக்கம்—சித்தாந்தகலாநிதி
ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை ௨௪௯
திருவள்ளுவர் திருநாள்—பண்டிதர்,
கா. பொ. இரத்தினம், எம். ஏ., பி. ஓ. எல். ௨௮௪
திருவள்ளுவர் நாஞ்சில் வள்ளுவன்—வித்துவான்,
திரு. சு. குமாரஸ்வாமி ஆச்சாரி, எம்.ஏ., மயிலம் ௨௪௭

திருவள்ளுவர் நாள்—பு. சி. புன்னைவன நாதன் ௪௭௫
திருவெம்பாவை-திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை ௫௭, ௧௩௦
தோழியின் துப்பு—கவிஞர் மாவண்ணா,திருவத்திபுரம் ௫௧௮
நந்தா மணிகள்—கோம்பைச் சீரான் ௪௨
நல்குரவில் பெருமிதம்—வித்துவான்,
திரு. சீ. பாலசுப்பிரமணியன், குடியேற்றம். ௩௬௫
நல்லரசு—கவிமணித்தாசன் ௩௭௮
நாடகப்பேராசிரியர் சம்பந்தர்—இதழாசிரியர் ௨௪௧
நாவலர் நினைவுவிழாத் தலைமையுரை—வித்துவான் பண்டிதர்,
கா. பொ. இரத்தினம், எம். ஏ., பி. ஓ. எல். ௨௧௭
நான் யார்?—நாஞ்சில், கா. கணபதி ௨௪௮
நிகழ்கால வினை—திரு. ஞா. தேவநேயன், எம்.ஏ. ௪௨௧
நீத்தார் கடன்—இதழாசிரியர் ௭௩
நூல் நிலையம்—தென்னாப்பிரிக்கா, டர்பன்,
திரு. ச. மு. பிள்ளை அவர்கள் ௩௦௧
பட்டினப்பாலையிலோர் படியெடுப்பு—திரு. ப. இராமலிங்கன் ௪௪௧
பழந் தமிழ்நாட்டில் காதல்—சித்தாந்தச் செல்வமணி,
சி. பிருந்தா தேவி, திருக்கோகர்ணம் ௨௬௧
பாடுக பாடல்—நாகை, திரு. த. சிங்காரவேலன் ௪௪
பாண்பசிப் பகைஞன்—திரு. க. குமரன், குடியேற்றம் ௩௬
பாராட்டுரை—திரு. அ. சீனிவாசராகவன், எம். ஏ. ௩௧௫
புயலோ! புயல்!! புயல்!!!—புலவர்
திரு. பொ. வே. சோமசுந்தரனார், மேலைப்பெருமழை ௨௨௬
புலவரும் புரவலரும்—திரு சு. அ. இராமசாமிப் புலவர் ௯௧
புலவர் அறம்—திரு. க. குமரன் ௧௨௭
புலவர் மாணவர் தேர்வுத்தகுதி விளக்கம் ௪௭௬, ௫௨௪
பூங்குன்றனும் இளங்கோவும்
—வித்துவான், திரு. த. வடிவேலு ௩௭௩
பொங்கற் புதுநாள் வாழ்த்து—செல்லூர்க்கிழார்,
திரு. செ. ரெ. இராமசாமி பிள்ளை ௨௩௩

மகிழ்ச்சிக்கு எல்லை—செல்லூர்க்கிழார்,
திரு. செ. ரெ. இர்ரமசாமி பிள்ளை ௩௧

மதிப்புரை ௨௩௭, ௨௮௭, ௩௩௫, ௩௮௪, ௪௩௧, ௪௭௯, ௫௨௮, ௫௭௬

மதுரை நாயகம் பிள்ளை வரலாறு
—திரு. வ. திருவரங்கம் பிள்ளை ௩௪௯

மருத்துவம் வாழ்கவே
—திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ., எம். எல். ௨௯௪

மன்னைக் காஞ்சி
—செல்லூர்க்கிழார், செ. ரெ. இராமசாமி பிள்ளை ௮௫

மாங்குடி மருதன் இயலோவியம்—புலவர்,
திரு. பொ. வே. சோமசுந்தரனார் ௪௬௮, ௪௯௧, ௫௬௩

மீன் கொத்தி—திரு. பி. எல். சாமி, பி. எஸ்ஸி. ௪௧௭

மைவரை உலகம்
—வித்துவான், திரு. தி. மு. சங்கரலிங்கம் ௩௬௮

வாஞ்சு வகுத்த தமிழக எல்லை ஒவ்வா—இதழாசிரியர் ௩௩௭

வடமொழி வளருமா?—இதழாசிரியர் ௨௩௫

வழிப்போக்கர்—மேலைப்பெருமழை
புலவர், திரு. பொ. வே. சோமசுந்தரனார் ௩௬௧

வள்ளுவர் காட்டிய வழி
—வித்துவான், திரு. தெ. பி. பாலதண்டாயுதபாணி ௧௩௫

வள்ளுவர் நினைவுநாள்—இதழாசிரியர் ௪௩௩

வள்ளுவர் வகுத்த அரசியல்
—திரு. கே. ஜெகதீசன், குடியேற்றம் ௪௩௭

வாழ்த்துரை—கி. வா. ஜகந்நாதன் ௧௭

விழுமியான்—வித்துவான், திரு. ஆ. சிவலிங்கனார், மயிலம் ௫௫௧

# படங்கள்


| | பக்கம் |
| --- | --- |
| அண்ணுமலை மன்றம் | ௩௱௭ |
| அரசியலறிவு மாநாடு | ௨௱௯ |
| இராமநாத பிள்ளை, பி. ஏ. | ௪௱௧ |
| சகதேவ முதலியார், சேலை | ௫௨௯ |
| சண்முகம் செட்டியார் அவர்கள் | ௯௭, ௩௱௫ |
| சம்பந்த முதலியார் அவர்கள் பி. ஏ., பி. எல். | ௨௪௧ |
| சாமி வேலாயுதம் பிள்ளை பி. ஏ., எல். டி.. | ௪௯ |
| சுந்தரத்தம்மையார் | ௧ |
| பொன்னண்ணுக் களத்தில் வென்ருர் | ௨௯௩. |



திருவாட்டி

சுந்தரத்தம்மையார்

தோற்றம்: 1868. — மறைவு: 1952.

ௐ

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு ௨௭ | திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௩, ஆவணி செப்டம்பர், 1952 | பரல் ௧

# சுந்தரத்தம்மையார் பிரிவு

**தமிழகத்தொன்மை**

உலகத் தோற்றமுதல் தமிழகத்தை முடியுடை மூவேந்தர் ‘குடிதழீஇக் கோலோச்சி’ மாநிலங் காவலராய் வழி வழி மன்னுயிர்ப் பொருட்டு வாழ்ந்து வந்தனர் என்பது, ஆன்றோர் கூறிய மறுக்கவொண்ணா வாய்மை மூதுரையாம். அவருள் முத்துடைப் பாண்டி வேந்தரால் ஆளப்பட்டது கொற்கை.

**கொற்கை**

நெல்லை மாவட்டத்துள் அமைந்தது கொற்கையம் முன்றுறை. இஃது இன்று சிற்றூரேயாயினும் சங்கந்திகழ்ந்த ஈராயிரம் ஆண்டுகளுக்குமுன் தொண்டி, காவிரிப்பூம்பட்டினம் போன்று சிறந்த துறைமுகமாய் விளங்கிற்று.

**பிறப்பு**

நம் அன்னையார் பிறக்கும் பேறுபெற்ற கொற்கையும் அதுவே. இத்திருவூரில் விழுமிய வேளாண்குலத்து ஐயன் பிள்ளை என்னும் ஆன்றோர் ஒருவர் இருந்தனர். அவர் கல்வி அறிவு ஒழுக்கங்களில் மிக்கவராய் நல்லேர் உழவுத் தொழிலராய் நாடு வாழ வாழ்ந்தனர். அவர் பேச்சி அம்மையார் என்னும் அருந்துணையை மணந்து, விருந்தோம்பி வேளாண் வாழ்க்கைத் தாளாளராயிருந்தனர்.

நாட்டிலுள்ள நன்றுடைச் செல்வர் தங்களுக்கு வேண்டும் நல்லெருது முதலியன கொள்ளப்புகின், அவ்விலக்கண வல்லாராகிய நம் பிள்ளையவர்களை உடன்வைத்து இவர்கள் சொல் வழியே கொள்வர். இந்நிலையில் பிள்ளையவர்கட்குப் ‘பயக் குறையாம்’ பிள்ளைப் பேறு கிட்டாதாயிற்று. அதன்பொருட்டு

அம்மையப்பர் அடியிணைக்கீழ்க் கடுந்தவம் புரிந்தனர். தவப் பயனாய் நம் அன்னையார் திருவருள் வலத்தால் தோன்றினர். அன்னையார் தோன்றியநாள் ஆங்கில ஆண்டு ஆயிரத்து எண்ணூற்று அறுபத்தெட்டென்ப. அறிவாற்றல் அன்பு உறுப்பு முதலியவற்றான் அழகியராகத் தோன்றிய நம் அன்னையார்க்குச் சுந்தரத்தம்மையார் எனத் திருப்பெயர் சூட்டினர். சுந்தரம்-அழகு.

உடன்பிறப்பு

நம் அன்னையார் பிறந்த மூன்றாம் ஆண்டில் 'திலகவதி அம்மையார் பிறந்து சில முறையாண்டகன்றதற்பின், மாசின் மனத்துயரொழிய மருணீக்கியார் பிறந்த' தொப்ப உடன்பிறப்பாம் வளமிகும் இளவல் ஒருவர் தோன்றினர். அவர் திருப்பெயர் சங்கரலிங்கனார்.

வேற்றூர்

முன்னரே நன்றுடைச் செல்வர் கருதியாங்குப் பிள்ளையவர்களைக் குடும்பத்துடன் அழகிய பாண்டியபுரத்தில் குடியிருக்க வேண்டினர். பிள்ளையவர்களும் அதற்கிணங்கித் தம் பெருங் குடும்பத்துடன் அழகிய பாண்டியபுரம் புக்குக் குடியேறினர். வாழ்ந்துவருங் காலத்து அம்மையார்க்கு ஐந்தாண்டகவை நடப்பதாயிற்று. அந்நாளில் 'முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்து, அந்தி பகலாய்ச் சிவனை ஆதரித்து'ப் பெற்று வளர்த்த அன்னையார் பிரியலாயினர்.

வளர்ப்பு

அன்னையார் பிரிந்த பின்னாட்களில் தளவாய்புரத்து வாழும் தாய்மாமனார் தமிழ் தவழ் மனையில் அமிழ்தென வளர்ந்து வருவாராயினர் நம் சுந்தரத்தம்மையார். வாழநேர்ந்த சிற்றூர் கல்வி வளம்பெறுதற்கு வேண்டும் செவ்விபெறாத் திருவூராயிருந்தது. எனினும் திருவருள் வலத்தால் நம் அம்மையார் ஓதாதுணர்ந்த மூதறிவாளராயினர். இயற்கையிலேயே பணிவும், இன்சொல்லும், பழகினார் நன்மைக்கு இளகும் உள்ளமாம் கண்ணோட்டமும், பகுத்துணர்ந்து பண்புற முடிக்கும் துணிபும், எண்குணப் பண்ணவன் இணையடி வாழ்த்தும் எழிலும், தாளாண்மையே வேளாண்மையின் தாய்மை என்னும் தகையும், கற்பும், கடனறியொழுக்கமும், பொற்பும் பொருந்திய திருவினராய்த் திகழ்ந்தனர்.

சூழ்வு

நம் அம்மையாரின் பெரிய தந்தையார் மதுரைநாயகம் பிள்ளை அவர்களாவர். சிறிய தந்தையார் சுடலைமுத்துப் பிள்ளை

என்ப. இவ்விருபெருங்குரவரும் கோள்நூல் நுணுக்கம் வாய்ந்த கேழில் கணியர். வருவன வகுத்துக் கூறும் வாய்மை வல்லார். காலத்தாலும், சீலத்தாலும், கோலத்தாலும் ஞாலம் போற்றும் நல்லார். திரு. மதுரைநாயகம் பிள்ளையவர்களின் மகள் பிள்ளையின் பெயரரே திருநெல்வேலி மந்திரமூர்த்தி உயர் நிலைப்பள்ளித் தலைமையாசிரியராய் உறுபெருந்தொண்டாற்றி வருகின்றனர். அவர்தம் திருப்பெயர். திரு. வே. நடராச பிள்ளை, பி.ஏ., எல்.டி. என்ப.

### திருமணம்

"நல்லவென உறுப்புநூ லவர்உரைக்கும் நலம் நிரம்பி, இல் லிகவாப் பருவமாம்" மணப்பருவம் அம்மையார்க்கு எய்திற்று.

அம்மையாரின் அரும்பெரும் பண்பெல்லாம் அறிந்த ஆன்றோர், பாளையங்கோட்டை திரு. முத்துசாமிப் பிள்ளையவர்கள் திருமகனர் வயிரமுத்துப் பிள்ளை என்னும் வண்மையாளர்க்கு மணம் பேசலாயினர். மணமகன்தன் 'குணம்பேசிக் குலம்பேசிக் கோதில்' நலம்கண்டு இணங்குவாராயினர். எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் ஆயிரத்து எண்ணூற்று எண்பத்து நான்காம் ஆண்டு (1884) திருமணம் சிறப்புடன் நிகழ்ந்தது.

### வாழ்க்கை

பெண்ணொரு கூறன் பேரருளால் கருத்தொருமித்த காதலருடன் நல்லறமாம் இல்லறத்தை மேற்கொண்டு மனை வாழ்க்கையிற் புகுந்ததும் நம் அம்மையார் மனைமாட்சியராய், வளத் தக்காராய், சோர்விலராய், மூவிடத்தும் (இம்மை, உம்மை, அம்மை) மூவாத்துணைவியராய்ச் சாவாமருந்தொத்து வாழ்ந்தனர்.

### மக்கட்பேறு

காதலர் இருவரும் 'மனையறத்தில் இன்பமுறு மகப் பெறுவான் விருமபுவார், அனையநிலை தலைநின்றே ஆடியசேவடிக்கமல, நினைவுற'ச் செந்தமிழும் சிவநெறியும் செழிக்க வரும் புனைமணிப்பூண் காதலரைப் பெறத்தவம் புரிந்தனர். தவப்பேற்றால் முறையே ௧. முத்துசாமி, ௨. திருவரங்கம், ௩. ஐயன்பெருமாள் ௪. சுப்பையா, ௫. குப்பம்மாள் என்னு மக்களைத் தக்ககாலத்துப் பெற்றனர். இம்மக்களாலாம் மாண்புறுசெல்வத்தைப் பொருவரும் இருவரும் சின்னாள் நுகர்ந்தனர். ஐவருள் திருவரங்கனாரும், சுப்பையனாரும் பிற்கால வாழ்வைக் காட்டும் பெருங்குறிப்புப் பலகை விளங்கினர்.

காதலற் பிரிவு

ஏறத்தாழப் பதினெந்தாண்டு காமஞ்சான்ற இல்லறத்தை ஏமமுற நடத்தியபின் 1899-ஆம் ஆண்டு திரு. வயிரமுத்துப் பிள்ளையவர்கள் செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்த மனைவியாரையும் மக்கள் ஐவரையும் மிக்கபுகழுடன் விடுத்துச் சிவவுல கெய்தினர். அஞ்ஞான்று மக்கள் ஐவரின் அகவை, முறையே பதின்மூன்று, பத்து, ஏழு, மூன்று என்னும் ஆண்டெய்தினர் ஆண்மகார் நால்வரும். பெண்மகவு பத்துத் திங்களே எய்திற்று.

நோன்மை வாழ்வு

இம்மக்கள் ஐவரையும் வைத்துக்கொண்டு நம் அம்மையார், தம் நுண்ணறிவாலும், உழைப்பின் நோன்மையாலும் சீரும் சிறப்பும் எய்தத் தவவாழ்க்கை நடத்திவந்தனர். ஆருயிரனைய மக்களின் கல்வி ஒழுக்கம் பண்பாடு முதலிய பலவற்றுள்ளும் கருத்திருத்திச் செயலாலும், சொல்லாலும், தெளிந்தவுள நினைவாலும் பேணி வந்தனர்.

மக்கள் தாளாண்மை

ஐவருள்: முதலாமவர் முத்துசாமியார் தந்தையார் நிகழ்த்துவித்து வந்த வணிகத் தொழிலையே சில திங்கள் நடத்தி வந்தனர். அத்தொழில் தம் நிலைக்கு ஒவ்வாமை கண்டு அதனை யொடுக்கி வேறோர் கடையில் கணக்காளராய் அமர்ந்தனர்; திருவரங்கனார் ஐயன்பெருமாள் இருவரும் இணைபிரியா அன்பால் உயிர்த்துணையாங் கல்வியை ஊக்கமுடன் பயில் வாராயினர்.

திருவரங்கனார் திறம்

திருவரங்கனார் ஐந்தாவதுபடிவம் படிக்கும் காலத்தே தம் குடும்ப நிலைகண்டு கவன்றனர். எனினும் இல்லாண்மை ஆக்கு வதே நல்லாண்மையாதலின், உரனுடைய உள்ளத்தராய் ஆவன செய்ய முயன்றனர். காலினும் கலத்தினும் வரும் தாவில் நன்பொருள்கொண்டு குடும்பம்பேண உன்னினர். "திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்றும் மூதுரைக் கிணங்கத் தூத்துகுடியில் சின்னாள் வணிகத்துறையில் நாட்டமுடன் பழகிக் கலத்தின்வழி நலம் பல நிறைந்த இலங்கை சென்றனர். சென்றநாள் 1907-ஆம் ஆண்டாகும். முற்போக்கான சிறந்த செல்வர்பால் ஊழியம் புரியலாயினர். அரங்கனாரின் அறிவாண்மையும், அன்பூக்கமும், இன்பும், புன்னகையும், சலியாவுழைப்பும், குறிப்பறிதலும், நெறிப்பட ஆற்றலும், யாவரையும் வயப்படுத்தலும், வாய்மையும், தூய்மையும், கடவுட்பற்றும், தமிழ்க்

காதலும், பெரியாரன்பும் அவர் தம் முதலாளிமார்கட்கு இவர்பால் அளவிறந்த அன்பையும் நன்மதிப்பையும் கொடுத்தன.

ஓய்வு நேரங்களில் மறைமலையடிகளாரின் நூல்களைப் படித்து மகிழ்வர். அவர்பால் பேரன்புகொள்வர். அவர் தம் இணக்கத்தை அவாவுவர். அதற்காம் நன்முயற்சியில் நாட்ட முறுவர். எண்ணத்திண்மையால் அதுவும் கைகூடுவதாயிற்று. முறையே 1914, 1917 இவ்விரண்டாண்டுகளிலும் மறைமலை அடிகளாரை இருமுறை இலங்கைக்கு வருவித்து என்றுங் கண்டிராத பெருங்கூட்டத்திடையே தமிழ்ப் பெரும்விரிவுரை ஆற்றுவிக்கச் செய்து பெரும்பொருள் தொகுத்து நல்கி அடிகளாரைத் தாய் நாட்டுக்கு அனுப்பினர். அடிகளாரும் அரங்கனாரை அறுபத்துநான்காம் அடியாரென்றே அறைந்தனர். பேரன்புப் பெருந்தொடர்புன்னித் தம் மகள் நீலாம்பிகை அம்மையாரை அரங்கனார்க்கு மணம் முடிப்பித்தளித்தனர். மணமும் 1927-ல் திருமயிலைத் திருக்கோவிலில் சிறப்புற நிகழ்ந்தது.

### கழகத் தோற்றம்

1920-இல் திருவரங்கனார் முன்னரே தாம் நடத்தி வந்த திருச்சங்கர் கம்பெனியை இணைத்துத் "தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்" என்னும் பெயரால் ஒரு சிறந்த நிலையத்தைத் துவக்கினர். அதற்கு உறுதுணையா உடனுழைத்து முன்னின்றவர் திரு. மா. திரவியம் பிள்ளையவர்கள் ஆவர். 1923 வரை இருவரும் ஒற்றித்து நின்று சீர்பெற நடத்தினர். பின்னர் திரு. திரவியம் பிள்ளையவர்கள் காலஞ் சென்றனர். அதன்பின் முழுப்பொறுப்பும் அரங்கனாரையே சார்ந்தது. கழகத்தை முழுப்பொறுப்புடன் விழுப்பமுற நடத்தி வந்தனர். இங்ஙனம் நடத்தும் ஆற்றல் அருமைத் தாயாரின் அன்பறிவு ஆற்றல்களின் ஊறிய எண்ணம் சொற் செயல்களாலேயாம்.

### மக்கட்பிரிவு

நம் அம்மையார் காதலற் பிரிந்த கடுந்துன்பம் கான்முளைகளை வளர்க்கும் தொண்டினாலும் அவர்தம் சீர்சிறப்பினாலும் ஒருவாறு நீங்கப்பெற்று ஆறுதல் எய்தி வருங்கால் முறையே 1915-இல் மணம்பெறாத மூன்றாம் மகனையும் 1920-இல் மணம் முடிந்து வாழ்ந்த முதல் மகனையும், 1926-இல் மணவாழ்வுற்ற குப்பம்மாளையும் இழக்க நேர்ந்தன. பிறந்தவர் இறப்பரேனும் காலங்கூடிக் கடவுளுலகெய்தின் அத்துணைத் துன்பமுறா. வளமைதுய்க்கும் இளம்பருவத்தே பெரும்பிறிதாயின் எவரே

வருந்தார்? எவரே ஆறுவர்? என் செய்வது? வினைப்பயனை வெல்லும் வினை ஏது? எவ்வாற்றானும் ஆறவொண்ணு இக் கொடுந்துன்பும் ஒரே மகள் குப்பம்மாள் விட்டுச்சென்ற கான் முளையாம் திருஞானம் என்ற செல்வப்பெயரனால் ஆறுதலுறு வாராயினர். இப்பெயரர் இப்பொழுது தல்லாகுளம் தந்தி யலுவலகத்துப் பணியாற்றி வருகின்றனர்.

அரங்கனார் பிரிவு

சிறந்த மகனாராகிய அரங்கனாரும் அவர்தம் வாழ்க்கைத் துணைவியராம் பெரும்புலமை வாய்ந்த நீலாம்பிகை அம்மையாரும் மனையறம் பேணி, மாண்புகழ்பெற்று, அளவிலா மக்கட் செல்வமும் பிறவும் எய்தித் தம் உயிரனைய தம்பியார் சுப்பையா பிள்ளையையும் தம் துணைவராய் நற்குடும்ப வாழ்வினராய் நாட்டி வாழ்ந்துவருவது கண்டு அம்மையார் கழிபேருவகை எய்தினர்.

இந்நிலையில் 1944-இல் திருவரங்கனாரும், 1945-இல், அவர் தம் துணைவியர் நீலாம்பிகையம்மையாரும் மக்கள் எண்மரை ஏங்கவிட்டு இறையடி நீழலெய்தினர். அம்மையார்க்குக் கழி பெரும் மூப்பில் இவ்விருவர் பிரிவும் எவ்வாற்றானும் ஈடு செய்ய முடியாத பெருந்துன்பமாப் பெருகியது.

சுப்பையனார் மாண்பு

மதலையாய் மற்றதன் வீழூன்றுவதுபோல் திருவரங்கனாரின் சீரிய இளவல் திரு. சுப்பையா பிள்ளையவர்கள் கழக ஆட்சித் திற மாட்சிபோல, குடும்பத்தையும் அன்பறிவு ஆற்றல்களாலும் இன்மொழியும் வேண்டுவ நன்கியற்றும் சிறப்பும், தம்மக்களின் மேலாகத் தமையனார் மக்களைத் தலையளித்துவரும் செவ்வி தவி ராது கல்வி, மணம் முதலிய கடமைகளைத் தக்கவாறாற்றி வரும் தனி மாண்பும் கண்டு அம்மையார் ஆறுதலெய்தி இன்புறுவாரா யினர். கழகத் தந்தை அரங்கனாரே போன்று தந்தையாய் ஆட்சிப் பொறுப்பாளராய் மன்னிப் பத்துப்பாட்டு மாநாடு, சித்தாந்த வகுப்பு விழா முதலியவற்றைத் திறம்பெற நடத்தினர். அம்மையாரும் கண்டு மகிழ்ந்தனர். தந்தையாய் வளர்த்த அரங்கனார்க்குத் தம்பியார் ஆக்கிய அரும்பெரு நன்றியென உலகம் புகழ்வதாயிற்று.

அருளிரக்கம்

பாளையங்கோட்டையில் ஒரு நூற்றாண்டுகட்கு மேலாக ஆயிரத்தம்மன் கோவிலில் பதின் இரவு (தசரா) விழாவில் எருமைக்கடா பலி கொடுத்துவந்தனர். இப்பலி பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை நிகழ்வதாகும். திருவரங்கனார் இக் கொடுங்கொலைப் பழியை நிறுத்த அருள்துணை கொண்டு முயன்

றனர். எதிரிகள் அரங்கனுரைக் கொல்லிய சூழ்ந்தனர். அம்மையார் "அஞ்சுவதுயா தொன்றுமில்லை அஞ்ச வருவதுமில்லை" அருள்துணையாளர்க்கு என மகனுரை ஊக்குவித்து வெற்றி பெறச்செய்தனர். அதன் பயனுக 1936-இல், இப்பலி கட்டோடு நிறுத்தப்பட்டது. இத்தனிப்பெரும் முயற்சியே ஆட்சியாளரைத் தூண்டி மா நிலமெங்கணும் தீப்பலியைச் சட்டவாயிலாக நிறுத்த ஊக்கமூட்டியது. அவ்வாறே எங்கணும் பலி நிறுத்தப் பட்டுச் சிற்றுயிர்கள் இன்புற்று வாழலாயின.

பேராஇயற்கை

அம்மையார் தம் எண்பத்துநான்காம் ஆண்டு இறையடி உறையும் செவ்வி எய்தினர். இவ்வுலகை விட்டு அகலும் ஆவி இறையடியை எய்தி இன்புறும் என்னும் அறிகுறி அவ்வாவியைச் சார்ந்தார் செய்யும் பிற் சடங்குகளும் அகத்துச் செய்யும் அருட் செயல்களுமாகும். அவர் தம் கடைசிப் படுக்கையைச் சூழக் குடும்பத்தாரும் உற்ருர் உறவினர்களும், திரு. அப்பா சாமி ஓதுவாரவர்களும், வீட்டுக் குழந்தைகளும், திருவாட்டி ஞா. உலகம்மையாரும் திருமுறையையே அல்லும் பகலும் ஒல்லும்வழி ஓதினர். திருவாசகத்தேன் இன்பமுழக்கிடையே அம்மையார் ஆவி 2-9-'52 செவ்வாய்க்கிழமை மாலை ஆறு மணிக்குச் சிவபெருமான் திருவடி நீழலை எய்திற்று.

இறுதிச்சடங்கு

3-9-'52 புதன்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு அன்பர்கள் அனைவரும் தம் இறுதி வணக்கத்தை ஏற்பித்துப் போற்றினர். அம்மையாரின் திருவுடலம் அருமை மகனுர் சுப்பையா பிள்ளையவர்கள் ஆசான் திருமுறை ஓதுவிக்க ஓதித் தமிழ் முறைப்படி திருமுழுக்கு முதலிய திருச்செயல்களைப் புரிந்தனர். பொருநையாற்றுப் புண்ணிய நீரும் பொற்பார் காசிக் கங்கை நீரும் அற்புடன் ஆட்டினர்.

புத்தாடை பூமாலை புனையப்பெற்ற அம்மையாரின் புண்ணியவுடல் மாலை 5-30-மணிக்குப் பொருநையாற்றின் புனித மருங்குசேர் நன்காட்டிற்கு எடுத்துச் செல்லப்பெற்றது. வழிநெடுகத் திருவாசகச் சிவபுராணம் ஓதியவண்ணமாய் அன்பர் திரள் திரளாய்ச் சென்றனர். அம்மையார் பெரும் புகழும் ஆர்வமுடன் பேசப்பட்டது. இந்நெறியில் மாலை ஏழு மணிக்கு நன்காடெய்திற்று இன்னுடல். ஆண்டுச் சந்தனம் அகில் முதலிய நறுமணக் கட்டைகள் விரவிய ஈம விறகின்மேல் வைக்கப்பெற்றது. வீரவநல்லூர் திரு. சுந்தரஓதுவார்மூர்த்தியவர்கள் முற்றத்துறந்த பட்டினத்தடிகள், பெற்ற தாயர்க்கு

எரியூட்டியபோது பாடியருளிய இன்தமிழ்ப்பாடலை இசையுடன் உளமுருகிப் பாடினர். பிற சடங்குகளும் தமிழ்முறைப்படி ஆற்றப்பெற்றன.

அம்மையாரவர்களின் நினைவாக வெளியிடப்பட்ட நினைவு மலர். வந்திருந்தார் அனைவர்க்கும் வழங்கப்பெற்றது. அம்மை யாரின் வரலாற்றினை அம்மலர் வழியாகத் திரு. பெருநாவலர், புன்னைவனநாத முதலியாரவர்கள் படித்தனர். அனைவரும் பாராட்டினர். அரும்பண்பு நினைந்து அகங்குழைந்து பரிந்த னர். இரவு எட்டு மணிக்குச் சுற்றமும் சூழ்வும் மகனாரும் ஆற்றொணுப் பரிவுற நல்லுடல் ஒள்ளெரி ஊட்டப்பெற்றது.

பின்பு அனைவரும் பொருனை நீராடி அருள்நினைந்தமர்ந்த னர். அனைவர்க்கும் மெய்யுணர்வுக் குறியாம் வெண்பொங்கல் வழங்கப்பெற்றது. அனைவரும் உண்டு மகிழ்ந்தனர்.

கழக ஆட்சிக் குழு உறுப்பினர்களான திருவாளர்கள் வி. சங்கரநாராயண பிள்ளை அவர்களும் ஆரல்வாய் மொழி சி. ந. சுப்பிரமணிய பிள்ளை அவர்களும் வந்து நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டனர்.

நன்காடுவரை நல்லன்புடன் வந்த பல்லோர் பெயரையும் குறிப்பதற்கு இடமின்மையால் வருந்தி ஒரு சிலரையேனும் குறிப் பிடலுறுகின்றோம். அவர்கள் திருப்பெயர் வருமாறு :

திரு. அப்பாசாமி ஓதுவார், திரு. சி. பயிரவ முதலியார் B. A. B. L., திரு. டாக்டர் V. சிவசம்பு பிள்ளை, திரு. டாக்டர் R. சண்முகம் பிள்ளை, திரு. V. சங்கரலிங்கம் பிள்ளை B.A.B.L., திரு. C. R. சோமசுந்தரம் பிள்ளை, திரு. P. S. இலட்சுமண பிள்ளை, திரு. P. உமையொருபாகம் பிள்ளை (ரிடையர்ட் போஸ்ட்மாஸ்டர்), திரு. S. சுப்பிரமணிய பிள்ளை (நெல்லைச் சில்லா போர்டு அமைச்சர்), திரு. வித்துவான் குரூஸ் அந் தோணி, திரு. வித்துவான் ந. முத்தையன் பண்டாரம், திரு. வக்கீல் S. வானுவாமலைப் பிள்ளை B.A.B.L.

அடுத்த நாள் 4-9-52 காலை 9-மணிக்குமேல் பாகனேரியி லிருந்து வந்திருந்த கழகத் தலைவர் திரு. மு. காசிவிசுவநாதன் செட்டியாரவர்கள் முதலியோருடன் நன்காடு சென்று அம்மை யார் திருவுடலின் எரியூட்டப்பெற்று எஞ்சிய எச்சம் பொரு னைப் புனித நீரிற் கலக்கப் பெற்றது.

அம்மையார் ஆன்மா இறைசிவனருளில் என்றுங் கலந்து இடையறுப் பேரின்பம் அடைந்துய்வதாக எனச் சிவனருளை வழுத்துகின்றோம்.

—இதழாசிரியர்.

# இன்றியமையாச் செந்நெறித் தொண்டு

[திருவண்ணாமலை ஆதீனத்தார், குன்றக்குடி]

அண்மையில் திருச்சியில் நடத்திய சொற்பொழிவு ஒன்றில் திரு. ஈ. வே. ரா. தேவாரம் திருவாசகம் முதலிய நூல்களை எரிக்கவேண்டுமென்றும், கோயிலில் திரு உருவங்களை உடைக்கவேண்டுமென்றும், பேசியிருப்பது குறித்துக் குன்றக்குடி, திருவண்ணாமலை யாதீனம் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் அருள்வது :—

மக்களை விலங்குணர்ச்சியினின்று நீக்கி மக்களாக வாழ வைப்பது மதம். மக்களைத் தூய அன்பு நிறைந்த, அறந்தழுவிய வாழ்க்கைக்கு அழைத்துச் செல்வது மதம். மக்கட் கூட்டத்தின் சிக்கல்களை நீக்கி, மனம் மாறுபட்டுக்கிடக்கின்ற மக்கட்கூட்டத்தை ஒன்றுபடுத்துகின்ற ஒப்பற்ற காரியத்தை மதம்தான் செய்கிறது. மக்களிடையே நல்ல உணர்ச்சியை வளர்க்கின்ற ஒப்பிலாத் திரு அருட்கூடங்களாகத் தமிழகத்தில் திருக்கோயில்கள் விளங்கின; விளங்குகின்றன; விளங்கும். தமிழகத்தின் முடிமன்னர்கள் திருக்கோயில்கள் எடுப்பதைப் பேரறமெனக் கருதி விண்ணளாவுகின்ற ஆயிரக்கணக்கான கோயில்களை எடுத்தனர். தமிழகத்தின் கலைக்களஞ்சியமாக, உயர்ந்த நாகரிகத்தின் அடையாளமாகத் திருக்கோயில்கள் விளங்குகின்றன. தமிழகத்தின் பெருமை திருக்கோயில்களைச் சார்ந்தே இருக்கிறது. அவலம் நிறைந்த அன்றாட வாழ்க்கையிலிருந்து மனிதனை இன்பச் சிந்தனைக்கும் எதிர்கால நம்பிக்கைக்கும் அழைத்துச் செல்கிறது, திருக்கோயில் வழிபாடு. அம்மட்டோ செப்பற்கரிய முப்பொருள் (இறை, உயிர், தளை) உண்மையும், ஓரறிவு முதல் ஆறறிவு ஈறாகவுள்ள அனைத்துயிரும் ஆண்டவன் எழுந்தருளி உறையும் நடமாடும் கோயில்களெனவும், அவ்வுண்மையைப் புறத்துப் புலப்படுத்தும் அடையாளங்கள் கோவில்கள் எனவும், ஆண்டவன் திருமுன் அனைத்துயிர்களும் சமம் என்னும் வாய்மை தெரிக்கும் தூய்மை சேர் நிலையம் திருக்கோவில்கள் எனவும், காணினும் கேட்பினும் கருதினும் மக்களைத் திருத்தி மாணுறச் செய்யும் மன்பேரடையாளம் திருக்கோவில்கள் எனவும் கருதுக.

இத்தகு சிறப்புக்கள் பொருந்திய திருக்கோயில் வழிபாட்டு முறையினை இகழ்ந்துரைப்பதே அறியாமையின் பாற்பட்ட செயல். அத்துடன் நில்லாது திருவுருவங்களை உடைக்கவேண்டும் என்பது எண்ணற்ற அடியார்களின் மனதைப் புண்படுத்தும் பேச்சு. திருவுருவங்களை உடைப்பதென்பது, அவற்றை

ஆக்கியும் நிறுவியும் அன்புடன் வழிபட்டும் வந்து பயன் எய்தித் தாங்கள் எய்திய திருவருட்பயனைத் தங் கால் வழியி னுள்ளார் ஊழியூழி வழிவழி எய்தி வாழவேண்டுமென்னும் பெரு நோக்கங் கொண்டுள்ள அவர்தம் திருவுடலங்களையும், இப்பொழுது அம்முறையே வழிபட்டு வரும் எண்ணிலா மக்கட் குழுவின் இன்னுடலங்களையும் உடைப்பேனெனத் துணிவ தாகும். இச்சொல் ஓர்ந்துணராஒருவன் சொல். வாய்காவாச் சொல்லாய் வாழ்வார் அனைவர்க்கும் நெஞ்சம்போழும் வஞ்ச மாய்த் தோன்றி வருத்தும் என்பது மறுக்கவொண்ணு வாய்மையேயாம்.

உடற்கு உறுதியாம் உணவொத்து உயிர்க்குறுதியாகக் கலைகள் திகழ்கின்றன. இக்கலைகள் தொன்றுதொட்டு ஓவிய வடிவிலும் நூல் வடிவிலும் புலவர் பெருமக்களால் வடித்துக் கொடுக்கப்பெற்று நிலவி வருகின்றன. ஓவியவடிவம் படி எடுக்கவேண்டாப் பெரும்பயனுள்ளது; நீடுநிற்பது; எல்லார்க் கும் இன்பயன் அளிப்பது; உள்ளுணர்வை உடங்கு எழுப்புவது. நூல், கற்றூர்க்கே பயன் தருவது; படி எடுக்கவேண்டுவது; நீடு நில்லாதது. நம் தமிழக முடியுடை வேந்தர் ஓவியவடிவ நூலைத் திருக்கோவில்களில் அமைத்து வைத்த பெருநோக்கம் ஆள்வார்க்கும் ஆளிய வருவார்க்கும் திருக்கோவில் பொது. அரண்மனை ஆள்வார்க்கே உரியது. அரண்மனையிலமைத்தால் அவ் ஓவியம் அரண்மனை அழிக்கப்படும்போ தழியும்; திருக் கோவில் ஒருகாலத்தும் அழிக்கப்படாது. இவ்வுண்மை தேறியே அமைத்தனர், நல்லறிவு சான்ற தமிழக வேந்தர்கள். பகைவர் அரண்மனையை அழித்தார்கள். ஆனல், திருக்கோவில்களை அழிக்கவில்லை. ஆள்வோர்க்கும் ஆளப்படுவோர்க்கும் ஒற்றுமை யுணர்த்துவது கோவில்.

முன் அறியாமைவலியால், ஆட்சித் திமிரால், அறநெறி பிழைத்து அருள் நிலையங்களை அழித்த, அழித்தற்குத் துணை செய்த கொடியாரை இன்றும் அருட்பெருஞ் சான்றோரும் அனைத்துலகோரும் இகழ்ந்தொதுக்கி எள்ளுந் தன்மையை அறி யாதார் எவரே? தீ வைக்கப்பட்ட இல்லம் பின்னுள்ளாரால் புதுப்பிக்கப்படுவது போன்று அவையும் புதுப்பிக்கப்பட்டுப் போற்றி வருவதும் கண்கூடன்றோ? பார்மின்! இந்தி எழுத் துக்களை அழிப்பது போன்றதல்ல இக்காரியம். திருக்கோயில் களைக் காப்பதற்காக இன்னுயிரும் ஈந்து இறுதிவரையிற் போராட அறிவும் ஒழுக்கமும் ஆண்மையும் நிறைந்த நல்ல தோர் இளைஞர் செறிந்த தொண்டர் குழாம் காத்திருக்கிறது. எதையும் ஆராய்ந்து பார்க்காமல் வாயில் வந்ததை எல்லாம்

பேசுவது தலைவரெனத் தனிப்பெயர்பூண்டார்க்கு அழகறிவு ஆற்றல் ஆண்மைகளல்ல. நூல்களை எரிப்பதனால் கொள்கை அழிந்து விடுமா? அப்படி அழிந்து விடுமென்று எண்ணுவதைப்போல மருந்தில் தீராப் பைத்தியத்தன்மை வேறில்லை.

மக்களாய்ப் பிறந்தோர் பேசுகின்ற வேறு எம் மொழியிலும் இல்லாத வண்ணம் தமிழில் பத்திப் பாடல்கள் நிறைந்துள்ளன. தேவாரம், திருவாசகம், திருவாய் மொழி, ஏனைப் பனுவல்கள் முதலிய பத்திப்பாடல்கள் அருள்நுகர்வுப் பாடல்கள். அவைகள் மக்களை வாழ்விக்கின்ற அமுத மொழிகள். அவைகளின் அருள் நாதம் இந்த நாட்டில் ஒலிக்கின்ற வரை இந்நாடு வாழும். அவைகள் பத்தி நூல்களன்றிப் படிக்குந்தொறும் இன்பம் பயக்குகின்ற தேனூறு தமிழாக மொழி வளம் நிரம்பிய இலக்கியச் செறிவாக இருப்பதைப் பெரியார் மறந்ததேன்? அந்த நூல்கள் பயக்கும் இன்பத் தமிழைப் படித்து நுகராததுதான் காரணமா? தமிழ் உள்ளவரை தேவாரம், திருவாசகம் முதலியன வாழும். தேவாரம், திருவாசகம் முதலியன வாழும் வரை தமிழ் வாழும். வீணான பயன் தராத பேச்சுக்களைத் தோன்றியவாறு பேசிச் சிறப்புடைய தமிழ் மக்கட் கூட்டத்தின் கசப்பைப் பெற்றுக் கொள்ளாதிருப்பது நன்மை தரும்.

குன்றக்குடி,
ஆக. 11, 1952.

தமிழகத்தில் சமய வளர்ச்சி சிறப்புற நடைபெறுவதன் பொருட்டு வழி வகைகளை ஆராய்வதற்குரிய மாநாடு ஒன்று ஏற்கெனவே அறிவித்தவாறு 10-8-'52 ஞாயிறன்று, முற்பகலிலும் பிற்பகலிலும் குன்றக்குடி, திருவண்ணாமலை ஆதீனத்தில் நடைபெற்றது.

தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் சமயப்பெரியார்கள், பேரறிஞர்கள் பலர்வந்து மாநாட்டில் பங்கு கொண்டனர். மாநாட்டிற்குத் திருப் பெருந் திரு. தெய்வசிகாமணி அருணாசல தேசிக அடிகளார் தலைமை பூண்டார்கள்.

கூடி இருந்த ஆட்பேறர்களை (பிரதிநிதிகள்) திரு. சா. கணேசன் அவர்கள் வரவேற்று மாநாட்டின் நோக்கங்களை விளக்கிக் கூறினார்.

"பண்பாடு தேய்ந்து வருகிறது. பண்பாட்டிற்கு அடிப்படை கடவுட் கொள்கை. உணர்ச்சியைப் புண்படுத்தும் பல செயல்களும் பேச்சுக்களும் நடந்து வருகின்றன. கற்று நற்றிறம் படர்ந்து நாட்டுக்கும் மொழிக்கும் நன்னெறிக்கும் நற்றொண்

டாற்றவேண்டிய மாணவர்கள் மனம் மாசு படுத்தப்படுகிறது. தமிழாசிரியர்கள் பெரும்பாலோர் இக்காரியத்தை ஆழ்ந்தாராயாது செய்து வருகின்றனர் என்பதைச் சொல்லாமலிருக்கவும் முடியவில்லை. உறுதிகொண்டு எழுந்து சமயத்திற்கு வந்துள்ள ஆபத்தைக் களைய வேண்டும்" என்று கூறினர்.

தலைமை வகித்த திருப் பெருந்திரு. அடிகளார் அவர்கள் "இந்த நாட்டிலே ஒரு சில ஆண்டுகளாக வளர்ந்து வருகின்ற நிலை துன்பத்தையும் துயரத்தையும் அளித்து வருகின்றது. சமயத்திற்கு வந்த ஆபத்தைத் தக்கதொரு அமைப்பை ஏற்படுத்தித் தவிர்க்கவேண்டும். இந்த அமைப்பை ஏற்படுத்தத் தமிழ் நாட்டில் எத்தனையோ நிலையங்களும் பெருமக்களும் இருக்கின்றனர். எனினும், யாரும் இதுவரை முன் வரவில்லை. இந்த நிலையிலே பல அன்பர்கள் நம்மை ஓர் அமைப்பு ஏற்படுத்துமாறு கேட்டுக்கொண்டார்கள். பலமுறையும் வற்புறுத்திச் சொன்னார்கள். சில நாட்களுக்கு முன் திருவருள் வாய்ப்பால் விரைந்து செய்யவேண்டும் என்ற எண்ணம் புகுந்து அதைத் தொடங்கிவிட்டோம்.

திருவண்ணாமலை ஆதீன மடம் அத்துறையில் ஆவனவற்றைச் செய்யக் காத்திருக்கிறது. சிவநெறிப் பணியில் ஈடுபடவேண்டும். கடவுள் நம்பிக்கையையும் சமயப் பற்றையும் அடிப்படையாகக் கொண்டு பணி செய்யவேண்டும். சிவநெறிப் பணியில் ஈடுபடுவது என்று சொன்னால், ஏனைய சமயங்களைத் தாழ்த்திப் பேசவேண்டும் என்பதில்லை. சிவநெறியும் அங்ஙனம் வழிகாட்டவில்லை. மேலும் உலகிலேயே எல்லா நெறிகளையும் படிமுறையாகக் கொண்டு முடிவில் இன்பவழியுய்க்கும் முடிந்த முடிபாம் (சித்தாந்தம்) நெறி சிவநெறி எனவும் திகழ்கின்றது. சிவநெறி எனினும் கடவுள் நெறி எனினும் ஒக்கும்.

காலம் மாறிவிட்டது. சமயம், சமயம் என்று சொல்லுவதால் பயன் இல்லை. பொதுமக்களுடன் பழகித் தக்கமுறையில் வினாக்களுக்கு விடையளிக்கவேண்டும். சமயச் சொற்பொழிவுகளைப் பொது இடங்களிலே நடத்திப் பொதுமக்களிடையே அக்கருத்துக்களைப் பரப்பவேண்டும். சமயம், சமயத்தின் தேவை இவற்றை மக்களுக்கு உணர்த்த வேண்டும். இதற்கென ஒரு திருக்கூட்டம் சிறப்பாகச் சைவசமயப் பணி செய்யும். ஆகையால், கடவுள் நம்பிக்கை உள்ளவர்களெல்லாம் இதில் சேரலாம்," என்று கூறினர்கள்.

மாநாட்டிற்கு வரமுடியாவிட்டாலும் "மாநாட்டுத் தீர்மானங்களை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு பணி செய்கிறோம்," என்று

உயர்திருவாளர்கள் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார், வி. ஐ. முனுசாமி பிள்ளை, புலவரேறு அ. வரத நஞ்சையப் பிள்ளை ஆகியோர் அனுப்பி இருந்த கடிதங்கள் படிக்கப்பட்டன.

மாநாட்டிற்கு வந்திருந்த ஆட்பேறர் தத்தம் கருத்துக் களைக் கூறினார்கள்.

திருநெல்வேலி வ. சுப்பையா பிள்ளை அவர்கள் "சைவ சமயத்தில் மக்களுக்கு அழுத்தமான பற்றுதல் ஏற்படும் வண்ணம் நல்ல முறையிலே—கிறித்தவர்கள் தங்கள் மதத்தைப் பரப்ப என்னென்ன வழிகளைச் செய்கிறார்களோ அதேபோல் நாமும் செய்யவேண்டும்," என்று கூறினார்.

நெற்குப்பை சோம. லெ. இலக்குமணச் செட்டியார் அவர் கள் பேசுகையில், "சமயக் கல்லூரி ஒன்றை ஏற்படுத்த வேண்டும்" என்றும், "மானேச்சுமெண்டாரால் நடத்தப்பெறும் உயர்நிலைப் பள்ளிகளில் சமயப் பாடத்திற்கென்று வகுப்புக்கள் ஒதுக்கப்படல் வேண்டும்" என்றும் கூறினார்.

மதுரை எஸ். ஜி. இராமலிங்கம் அவர்கள் பேசுகையில், "சம யப் பிரசாரம் தீவிரமாக நாட்டில் நடைபெறுவதற்கான பயிற்சி வகுப்பு ஒன்றை ஏற்படுத்தல்வேண்டும்", என்றும் கூறினார்.

கோயம்புத்தூர் சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள் பேசுகையில், "கிறித்தவர்கள் செய்துவரும் அரும் பணிகளைக் குறிப்பிட்டு அதேபோல நாமும் உருவான வேலைத் திட்டத்தில் இறங்கவேண்டும்," என்று கூறினார்.

மதுரை திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம் அவர் கள் பேசுகையில், "திராவிடக் கழகம் விக்கிரகங்களை உடைக்கச் செய்யும் முயற்சி பகற் கனவுதான்" என்றும், "எனினும் இராஜாஜி அவர்கள் கூறியவாறு உலகம் நாத்திகம், ஆத்திகம் என்ற இரு பிரிவுகளாகத்தான் இருக்கும்" என்றும், "தற் பொழுது ஏற்பட்டிருக்கின்ற நிலையில் நாத்திகர்களோடு நாம் போராடத்தான் வேண்டும்" என்றும் கூறினார்.

அம்பாசமுத்திரம் ஆ. முத்துக்குமாரசாமி பிள்ளை அவர்கள் பேசுகையில், "கோவில்களில் வந்து வழிபடும் மக்களுக்கு வழி பாட்டின் நோக்கங்களை நன்கு விளக்கவேண்டும்," என்று கூறினார்.

மதுரை எம். எஸ். பி. சண்முகம் அவர்கள் பேசுகையில், "சமயம் மக்களிடையே பரவ இலக்கியத்தைத் தெளிவுபடுத்த வேண்டும். இலக்கியம்தான் சமயத்தை வளர்க்கும். அப்பணி யிலே கவனம் செலுத்த வேண்டும்," என்று கூறினார்.

பின்னர் "அருள் நெறித் திருக்கூட்டம்" என்ற பெயரால் ஓர் அமைப்பை நிறுவ எல்லா ஆட்பேறர்களும் ஒருமனதாக ஒப்புக்கொண்டனர். அதன்படி அருள் நெறித் திருக்கூட்டம் என்ற பெயரால் ஓர் அமைப்பு நிறுவப்பட்டது.

அருள் நெறித் திருக்கூட்டத்தின் நோக்கங்கள்.

1. தெய்வ நம்பிக்கையை வளர்த்தல்.

2. சமயப் பிணக்கை அகற்றல்.

3. மொழி, கலை, சமயம், பண்பாடு, ஒழுக்கம்பற்றி நூல்களும், இதழ்களும் வெளியிடுதல்.

4. ஏழை, எளியவர், நோயாளிகள் இல்லங்கட்குச் சென்று உதவி புரிதல். (திருமுறை ஓதிச் சிவநினைவை எழுப்பித் தெளிவித்தல்.)

5. பள்ளிகள், மருத்துவச்சாலைகள், மாணுக்கர் இல்லங்கள், அநாதை விடுதிகள், சமயக் கல்லூரிகள், உடற்பயிற்சிக் கூடங்கள், ஆதரவற்ற பெண்களுக்கு ஆசிரமம் முதலியன நடத்தல்.

6. சிறைச்சாலை, மருத்துவ நிலையங்கள் முதலிய இடங்கட்குச் சமய விரிவுரையாளர்களை அனுப்பி வார வழிபாடு அல்லது கடவுள் உண்மையைப்பற்றிப் போதனை செய்வது.

7. சமய நிலையங்கள், வழிபாட்டுக் கூடங்களின் புனிதத் தன்மையைப் பாதுகாத்தல்.

8. இளைஞர் உலகம், தீய ஆற்றல்களின் வயப்பட்டுக் கெடுவதைத் திருத்தல்.

9. தெய்வ நம்பிக்கை உடையவர்களின் உணர்ச்சியைப் புண்படுத்தும் செய்கைகளை எவர் மேற்கொண்டாலும், அவற்றை அன்பறிவு ஆண்மை அறமுறைகளோடு தடுக்கத்தக்க வழிகள் அனைத்தையும் மேற்கொள்ளல்.

10. தொண்டர் குழாம் ஒன்று நிறுவி அதன் கிளைகளைத் தமிழ்நாடு முழுவதும் வளரச் செய்தல்.

இத் திருக்கூட்டத்திற்கு ஆண்டுக்கு ஒரு ரூபாய் செலுத்தும் உறுப்பினர்களும், கால் ரூபாய் செலுத்தும் அன்பர்களும், என்று இருவகை உறுப்பினர்கள் உண்டு.

தலைமைத் திருக்கூட்டம், மாவட்டத் திருக்கூட்டம், நகர்த் திருக்கூட்டம், கிராமத் திருக்கூட்டம் ஆக நான்கு படிகள் உண்டு.

இதன் விரிவான அறிக்கைக்கும், சட்ட திட்டங்களுக்கும் அடியிற்கண்ட முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

செயலாளர், அருள்நெறித் திருக்கூட்டம், குன்றக்குடி இராமநாதபுரம் மாவட்டம்.

இவ்வருள் நெறித் திருக்கூட்டத்திற்குத் தலைவராகத் திருப் பெருந்திரு தெய்வசிகாமணி அருணசல தேசிக அடிகளார் அவர்களே இருக்கவேண்டும் என்றும், அவர்கள் கட்டளையின் படி தாங்களும் தமிழ்நாட்டில் உள்ள ஏனையோரும் பணியாற்று வதாகவும் கூறினர்கள்.

மாநாட்டிற்கு வந்திருந்தவர்களில், பண்டிதமணி மு. கதி ரேசச் செட்டியார், ஔவை சு. துரைசாமிப் பிள்ளை, சைவப் பாதிரியார் சச்சிதானந்தம்பிள்ளை, தெ. பொ. மீனுட்சி சுந்தரனுர், சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், சேவு. மெய்யப்ப செட்டி யார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

அருள்நெறித் திருக்கூட்டத்தின் அமைச்சர்களாக உயர் திருவாளர்கள் சா. கணேசன், ஈரோடு எஸ். மீனுட்சி சுந்தரம் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கீழ்க்கண்ட தீர்மானங்கள் மாநாட்டில் நிறைவேற்றப் பட்டன :

1. கடவுள் நம்பிக்கையுள்ள அனைவரும் சமய வேறு பாட்டை மனதில் கொள்ளாது இணைந்து நின்று நமது பண் டைப் பெரும் பண்பாட்டைப் பாதுகாத்து வளர்க்க முன் வரவேண்டும்.

2. மக்களைச்-சிறப்பாக வருங்கால இளைஞர்களைத்-தவருன வழியில் இட்டுச் செல்லும் சில தீய இயக்கங்களால் நமது கலை யும், நாகரிகமும், பண்பாடும், பாதிக்கப் படக்கூடியதாக இருக் கின்றன. அந்த அபாயம் நம்மைச் சூழ்ந்து நாசம் விளைப்பதற்கு இடம் கொடுத்துவிடாமல் தடுத்து நிறுத்தவும், நமது பரம்பரை யான அற நெறியைக்—கடவுள் நம்பிக்கையை வலுப்படுத்தவும் அறிஞர்களும், அன்பர்களும், மடாலயங்களும், பொதுக் கழகங்க ளும், ஆக்கமும் ஊக்கமும் தந்து, இதற்கெனத் தோன்றியுள்ள அருள் நெறித் திருக்கூட்டத்தை ஆதரிக்க வேண்டுகிறோம்.

3. திராவிடக் கழகத்தார் மேற்கொள்ளும் நடவடிக்கை யினுல் பல தாறுமாருன விளைவுகள் நேரிடும் என இக்கூட்டம் எச்சரிக்கிறது.

4. நமது அரசாங்கம் மதச் சார்பற்றதென்பதை மதப் பற்றற்றது என்று தவறாகப் பொருந்தாப் பொருள் செய்து கொண்டு சில தீய ஆற்றல்கள் கடவுள் நம்பிக்கை உள்ளவர்களின் உணர்ச்சியைப் புண்படுத்தி ஆத்திர மூட்ட முனைந்திருக்கின்றன. அம் முயற்சியை முளையிலேயே கிள்ளி எறியாவிட்டால், மக்களிடையே நம்பிக்கை குறைந்து, எங்கும் குழப்பம் தலைவிரித்தாடத் தொடங்கிவிடும். அத்தகைய நிலை ஏற்படாதிருக்கத் தக்க முறைகளைச் சர்க்கார் மேற்கொள்வதுடன் நாடகம், சினிமா, புத்தகம், பத்திரிகைகள் மூலம் மிகப் பெரும்பான்மையோரின் கொள்கைகளை அவமதிக்கும் முறைகேட்டைத் தடை செய்யவேண்டும் என்றும், மாகாண, மத்திய சர்க்கார்களை இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

5. பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் வாரம் இருமுறையாவது சன்மார்க்க சமயப் போதனை கொடுக்கும்படி கட்டளையிடவேண்டுமென்று சென்னைச் சர்க்காரையும், சென்னைச் சர்வ கலாசாலையையும் இக் கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

6. நமது கலை, நாகரிகம், பண்பாடு, ஒழுக்கம், சமயம் முதலிய பல துறைகளில் பணியாற்றுவதையே தலையாய நோக்கமாகக் கொண்ட வார இதழ் ஒன்றைத் தொடங்கி நடத்த வேண்டுமென்றும் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

7. செந்நெறிச் செல்வர்களின் ஆட்சியில் நடைபெறும் கல்வி நிலையங்கள் யாவும் சமய போதனையை மேற்கொள்ள வேண்டும் என்றும், ஆங்காங்குள்ள பெற்றோர்களும் கடவுள் நம்பிக்கை உள்ளவர்களும் அதற்கு ஆவன செய்யவேண்டும் என்றும் இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

8. மாணக்கர்களுக்கென்று வாரம் ஒரு நாளில் காலை 9-30 மணிக்குத் திருக் கோவில்களில் சிறப்பு வழிபாடும், சமயப் போதனையும் ஏற்பாடு செய்யவேண்டும் என்று இந்துக் கோவில் நிர்வாகிகளையும் பொதுமக்களையும் இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

திரு. சா. கணேசன் அவர்கள் நன்றி நவில மாநாடு வெற்றியாக முடிவுற்றது.

தமிழகத்தின் பல பாகங்களிலிருந்தும் 56 ஆட்பேறர்கள் (பிரதிநிதிகள்) வந்திருந்தனர்.

---

குன்றக்குடி திருவண்ணாமலை யாதீனம் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி
அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகளுக்கு 10-8-'52
அன்று திருப்புத்தூர் வட்டாரப் பொதுமக்கள் அளித்த
வரவேற்பின்போது, சென்னை கலைமகள் ஆசிரியர்
திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் அனுப்பிய

## வாழ்த்துரை

திருப்பெற்றுக் கலைபெற்றுத் தமிழ்ச்சுவைதேர்
திறம்பெற்றுத் திருப்புத் தூரில்
உருப்பெற்று வாழன்பீர், நமக்கெளியேன்
வணக்கத்தை ஓது கின்றேன்;
மருப்பெற்ற கொன்றைமலர்ச் சடையானை
வழுத்துமண்ணா மலையா தீனக்
குருப்பெற்றி மிகுந்தவரு ணாசலதே
சிகமணியின் குணங்கா முற்றீர் (1)

உயர்குன்றக் குடிமடத்தில் நாற்பத்தைந்
தாம்பீடத் தோங்கி நின்று,
செயிர்குன்ற, அறியாமை இருள்குன்றச்
சைவத்தின் சிறப்பும் சீலப்
பயிர்ஒன்றும் குணவிளைவும் செந்தமிழின்
சுவைநலமும் பலவா றோங்க
அயர்வின்றித் தொண்டுபுரி நல்லருணா
சலமுனிவ னனையார் யாரே! (2)

இளமையினில் துறவேற்று முதுமையிலும்
வாராத ஏற்றம் பெற்றான்;
வளமையெலாம் சிவச்சீரைத் தமிழ்ச்சீரைப்
பரப்புதற்கே வாய்க்கப் பெற்றான்;
உளமுருகி அந்நாளில் மணிவாச
கப்பெருமான் ஓதும் வாக்கை
அளவறுமன் புடனோதி அவரேபோல்
உருகுகின்ற அன்பு பூத்தோன் (3)

சொற்பொழிவால் கல்மனமும் உருக்குதிறம்
        மிகவுடையான் சொற்போர் செய்தல்
அற்பமுல கத்தினிலென் றறைவார்கள்
        அதற்குவிலக் காகி வாழ்வோன்
புற்புதமாம் வாழ்க்கையிதில் சிவதருமம்
        வளர்த்தலொன்றே பொற்பென் றெண்ணி
நற்பரிவிற் கணந்தோறும் தொண்டுசெய்து
        வாழ்ந்துவரும் ஞான மூர்த்தி. (4)

வாவென்று பரிவோடு கூறுமுரை
        யினிலன்பு மணக்கும்; நல்ல
பாவென்றுென் றைக்கண்டால் அதன்நயத்தில்
        உளமாழ்ந்து பருகு மின்பத்
தாவென்றே தனைமறந்த நிலையிவன்பால்
        கண்டிருப்போம்; அறிவும் அன்பும்
தேவென்றே கருதுமா றுயர்ந்திருக்கும்
        இவன்பெருமை செப்பற் பாற்றே? (5)

முன்னரண்ணு மலைமடத்தில் குரவர்பலர்
        இருந்தாலும் முழங்கு சீர்த்தி
துன்னுநிலை இவன்பெற்ற வகைபெற்றார்
        ஆரேகொல்? தூய நெஞ்சம்
மன்னுதமிழ்ப் பெரும்புலமை, கரும்பனைய
        திருவாக்கு, வாய்த்த அன்பு
என்னுமிவை யோருருவாப் படைத்தஅரு
        ணசலதே சிகன்சீர் வாழ்க. (6)

வாழ்கதிரு வண்ணு மலையாதீ னம்; சீர்த்தி
சூழ்சைவ மாம்சமயம் தோற்றமுற—வாழ்கவே;
சாந்த அருண சலதேசி கன்வாழ்க
ஏந்து புகழோ டினிது.

சிவமுருகன் தமிழ்

# தமிழ் நெடுங்கணக்கு - பெயரும் எண்ணும்

[இராவ்சாகிப், சைவப்புலவர்
டாக்டர். தி. இரா. அண்ணாமலைப் பிள்ளை
L.C.P.S., L M.S.S.A. Lond. (திருக்குற்றாலம், தென்காசி)]

(செந்தமிழ்ச்செல்வி—சிலம்பு உரு; பரல் கஉ; ௫௭௪-ம் பக்கத்தொடர்ச்சி.)

## மெய்யெழுத்துக்கள்—18

'க, ச, த, ந', என்னும் நான்கு மெய்யெழுத்துக்களின் உருவத்திலும், ஒன்றுக்கொன்று நெருங்கிய ஒற்றுமை காணப் படும். ககரத்துக்குப் பக்கத்தில் ஒரு புள்ளி (அல்லது வட்டம்); சகரம் ஒரு வரியில் முடிகிறது; தகரம், நகரம் இரண்டும் கால்கள் உடையன. ஞகரம், 'எ' எழுத்தோடு விலங்கு (வளைவு) இணைத்ததுபோலுள்ளது. ஙகரம் தனியாக எழுதிப் பழகவேண் டியதொன்று. டகரம் நேர் வரி ஒன்றும் குறுக்கு வரி ஒன்றும் இணைந்தது; ணகர, னகரங்கள் முறையே மூன்று சுழியும், இரண்டு சுழியும் ஒரு நேர் கோடும் (Vertical line) உள்ளன. பகரம், இரண்டு நேர்கோடும் ஒரு குறுக்கு வரியும் சேர்ந்தது. பகரத்தின் உள்ளே ஒரு புள்ளி பெற்றது மகரம். ('உட்பெறு புள்ளி உருவாகும்மே'—தொல்காப்பியம், எழுத்ததிகாரம்-கச.)

யகரம், ஐகாரம் என்னும் எழுத்தின் கீழ்ப்பாதியில் உள்ள எழுத்து; ரகரம், நகரத்தின் முதற்பாதியோடு ஒரு சிறு கால் சேர்ந்தது. லகரம், வகரம் தனியே எழுதிப் பழகவேண்டிய எழுத்துக்களே.

மகரத்தோடு கால் சேர்த்தது ழகரம். றகரம் யகரத்தை தலைகீழாய் எழுதி, கால் இணைக்கப்படுவது; ளகரம், 'ஊ ஔ' எழுதும்பொழுது முன்னரே பழகியதேயாகும்; ('ஊ' என்னும் எழுத்தில், உள்ள 'ள' குறிக்கும், 'ஔ' காரத்தில் உள்ள 'ள' குறிக்கும், ளகர மெய்யைக் குறிக்கும் எழுத்துக்கும், மாறுபாடு ஒரு சிலர் காட்டுவது பொருத்தமல்ல வென்பது பின்னர் எடுத் துக் காட்டப்படும்.)

இத்தகைய முறையில் மெய்யெழுத்துக்களின் உருவத்தை உற்று நோக்கி இவ் வெழுத்துக்களை எழுதுவதற்குண்டான முயற்சிகளைக் கணக்கிடுவோம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க | ங | ச | ஞ | ட | ண |
| 1 | 1 | $\frac{1}{4}$ | $\frac{1}{4}$ | $\frac{1}{2}$ | $\frac{1}{4}$ |
| த | ந | ப | ம | ய | ர |
| $\frac{1}{2}$ | $\frac{1}{2}$ | $\frac{1}{4}$ | $\frac{1}{4}$ | $\frac{1}{2}$ | $\frac{1}{4}$ |
| ல | வ | ழ | ள | ற | ன |
| 1 | 1 | $\frac{1}{4}$ | ... | $\frac{1}{2}$ | — |

=8

என்னும் பதினெட்டு மெய்யெழுத்துக்களையும் எழுதுவதற்கு, எட்டு எழுத்துக்கள் எழுதுவதற்குண்டான முயற்சிக்கு மேலில்லை.

மேற்காட்டியபடி, தமிழ்நெடுங் கணக்கு—33 எழுத்துக்களும் எழுதுவதற்கு, உயிரெழுத்து (ஆய்தம் உள்பட)—7, மெய்யெழுத்து—8 ஆக, பதினைந்து எழுத்துக்கள் எழுதும் முயற்சிக்கு அதிகம் இல்லை. இவண், எழுத்துக்களின் முறையையாவது, மாத்திரையையாவது கணக்கிடவில்லை. எழுத்துக்களின் உருவத்தை எழுதுவதற்குண்டான முயற்சியைச் சுருங்கிய முறையில் அளவிடுகிறோம். இனி உயிர்மெய் யெழுத்துக்களை ஆராய்வோம்.

## உயிர்மெய்கள்—216

உயிர் மெய்கள் ஆகிய இருநூற்றுப் பதினாறு புதிய எழுத்துக்களை மாணவன் எழுதிக் கற்கின்றானென்பதுதான் இங்கு நாம் ஊன்றி ஆராயவேண்டியதாகும். தமிழ் எழுத்துக்களை எழுதிப் பழகாத பிறமொழியாளர்கள் உயிர்மெய் இருநூற்றுப் பதினாறாயிற்றே என்று மயங்குவது நாம் ஒருவாறு உய்த்துணரற் பாலதே.

ஆனால் தமிழையே தம் தாய்மொழியாகக்கொண்டும், உயிர் மெய்யெழுத்துக்கள் இருநூற்றுப்பதினாறு புதிய எழுத்துக்களை மாணவன் எழுதிக் கற்கவேண்டியதிருக்கிறது என்று எண்ணுவாரை நினைந்துதான் நாம் துன்புற்று வியப்படைய வேண்டியதாயிருக்கிறது!! இவர்களை, தயை கூர்ந்து உயிர்மெய்கள் நிரை நிரையாக எழுதப்பட்டுள்ள அட்டவணையைக் கூர்ந்து நோக்குமாறு பரிந்து வேண்டுகின்றோம்.

'உயிர்மெய்.' இவ் எழுத்து, மெய்யின் மேல் உயிர் ஏறியதால் ஏற்பட்ட எழுத்து

(உ-ம்) க்+அ=க; ச்+அ=ச. த்+அ=த.

க், ங், ச், ஞ், முதலிய பதினெட்டு மெய்யெழுத்தாகும்; இவண், 'க்' எழுத்துக்கும், 'க' எழுத்துக்கும் என்ன வேறுபாடு? 'க'

எழுத்தில் புள்ளியில்லை. பதினெட்டு மெய்யெழுத்துக்களையும் எழுதக் கற்றுக்கொண்ட மாணவன் பதினெட்டு (அகரம் ஏறிய) உயிர்மெய்களை எழுதுவதற்கு, 'க்' இல் உள்ள புள்ளியை மாத்திரம் நீக்கி, அதே எழுத்தைத் திரும்ப எழுதுகிறான். மாணவன், இவ்விடத்தில், 18 புது எழுத்துக்களை எழுதிப் பழகுவதாகக் கொள்வது பொருத்தமாகுமா? 'கெ', 'கே' எழுதக் கற்றுக் கொண்ட மாணவன், 'செ, சே, வெ, வே, னெ, னே' முதலிய எழுத்துக்களை எழுதுவதற்கு ஏதாவது முயற்சி வேண்டுமா? எகரம், ஏகாரம் ஏறிய உயிர்மெய்கள் முப்பத்தாறு. 36 புதிய எழுத்துக்களையா மாணவன் எழுதக் கற்றுக்கொள்கிறான்? இல்லை—இல்லை. ெ, ே, இரண்டே இரண்டு குறியை மாத்திரந் தானே எழுதக் கற்றுக்கொள்கிறான். (ஒருசில, புறனடையுள் ளனவற்றை அடுத்து ஆராய்வாம்.) ஆகவே, பொதுவாக ஆராயுமிடத்து,

| ஆ | இ | ஈ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|---|---|---|
| ா | *ி | ீ | ெ, | ே, | ை, | ொ | ோ | ௌ, |
| $\frac{1}{4}$ | $\frac{1}{4}$ | $\frac{1}{4}$ | $\frac{1}{4}$ | $\frac{1}{4}$ | $\frac{1}{4}$. | ,, | ,, | ,, |

இங்குக் கூறப்பட்ட 9 உயிர்கள் ஏறிய உயிர்மெய் எழுத்துக்களுக்கு வேண்டிய முயற்சி முறையே குறிக்கப்பட்டுள்ளன. ஒன்பது குறியீடுகளைமட்டும் மாணவன் கற்றுக்கொள்கிறானே யொழிய, $9 \times 18 = 162$ புது எழுத்துக்களைக் கற்பதில்லை. இவ் ஒன்பது குறிகளையும் மாணவன் எழுதப் படித்துக்கொண்டால், 162 (உயிர்மெய்) எழுத்துக்களை எழுதிவிடுகிறான். அகரம் ஏறிய உயிர்மெய்க்கும் மெய்யெழுத்துக்கும் உள்ள வேற்றுமை புள்ளி நீக்குதல் ஒன்றே என்று காட்டப்பட்டது. (உகரம், ஊகாரம் ஏறிய உயிர்மெய்கள்தான் அதிக விகாரமுடையவை; அவையும் இங்குக் கணக்கிடப்படும்.)

மேலே சுட்டிய, (உயிர்மெய்க்)குறிகளைக் கூர்ந்துநோக்கின்,

'ா', ரகரத்தை, காலில்லாமல் எழுதுவது - கால் ($\frac{1}{4}$) எழுத்து முயற்சி.

*ி. ீ. கால் ($\frac{1}{4}$) எழுத்துக்கு உண்டான முயற்சியே தேவை.

ெ, ே, ை, இவைகளுக்கும் காலெழுத்து ($\frac{1}{4}$) முயற்சியே கூறலாம்.

ொ, ோ, ௌ இவை மூன்றும் மாணவனுக்கு முன்னரே தெரிந்த குறியேயாகும்.

---

* மி மீ - இவ் வெழுத்துக்களிலுள்ள உயிர் அடையாளங்களையே ஈண்டுக் கொள்க.

ஆதலின், மாணவன் $6 \times \frac{1}{4} = 1\frac{1}{2}$ எழுத்து முயற்சியினுல், கிட்டத்தட்ட 184 உயிர் எழுத்துக்களை எழுதப் பழகிவிடுகிருன். ஒரு சில் விகாரங்கள் (Exceptions) அடுத்து நோக்குவாம்.

இனி எஞ்சியது உகரமும், ஊகாரமும் ஏறிய உயிர்மெய்க ளாகும். மற்றொரு முறை, அட்டவணையில் (உகரம், ஊகாரம் ஏறிய) மெய்யெழுத்துக்களைக் கூர்ந்து கண்ணுறுவது நலம்.

உகரம் ஏறும்பொழுது, மெய்கள் என்ன உருவம் பெறு கின்றனவோ, அவ்வுருவங்களிலிருந்துதான் ஊகாரத்துக்கும், அதேபோன்று, வடிவங்கள் படிகின்றன. சான்று—(ஙு, ஙூ) —(டு, டூ)—(ணு, ணூ) உகர ஊகாரங்கள் மெய்களில் ஏறும் பொழுது ஏற்படும் உருவங்களை நோக்கும்பொழுது, அவை மூன்று வகைப்படும்.

உகரமேறிய உயிர்மெய் 3-விகாரம்

1. கு, டு, மு, ரு, ழு, ளு—விலங்கு= (வளைவு) உள்ளது. 6
2. ஙு, சு, பு, யு, வு. (கீழ் ஒரு கோட்டில் முடிவது) 5
3. ஞு, ணு, து, நு, லு, று, னு (கீழிருந்து மேனோக்கிய ஒரு கோட்டில் முடிவது.) 7

இம் மூன்று விகாரத்தையும் எழுதுவதற்கு $3 \times \frac{1}{2} = 1\frac{1}{2}$ எழுத்துக்களுக்கு ஏற்படும் முயற்சிதான் வேண்டும்.

ஊகாரம் ஏறிய உயிர்மெய்கள்

1. டு, மு, ரு, ழு, ளு.—(உ-ம்.) டூ—ளூ. ஒரு சுழி இணைத்தலே. வேறு முயற்சி தேவையில்லை.

2. ஙு, சு, பு, யு, வு—கீழ்க்கோட்டிலிருந்து ஒரு வளைவு சேர்த்துச் சுழியை இணைத்தல். (உ-ம்.) சூ, பூ. எழுத்து முயற்சி—$\frac{1}{4}$.

3. 'ஞு, ணு, து, நு, லு, று, னு'—இவைகளோடு 'ா' என்னும் குறி சேர்த்தல். (உ-ம்.) லு, லூ. எழுத்துமேல் ஏறிய நேர்கோட்டை விட்டுவிட்டு 'ா' குறி இணைக்கப்படுவது (உ-ம்.) னு, னூ. முயற்சி $\frac{1}{4}$. 'கூ' ககரத்தினுடன், 'உ' சேர்க்கப்பட்டது. இது ஊகார மேறிய உயிர்மெய்களில் தனி விகாரம்—தனிச் சிறப்புமாகும்—முயற்சி $\frac{1}{2}$.

உகரம், ஊகாரம் ஏறும்பொழுது உயிர்மெய் யெழுத்துக்களில் ஏற்படும் விகாரங்கள் தவிர மற்றைய ஒரு சிறு புறனடைகளை (Exceptions), இங்கு சிந்தித்தல் பொருத்த மாகும்.

இவை யாவன :—

ஶ, ரு, ஞ
ஞெ, ஶெ, ஞெ
ஞே, ஶே, ஞே

இம் மூன்று அடுக்கும் விகாரம்போல் தோன்றினும், ஒவ்வொரு அடுக்கிலும் இம் மூன்றெழுத்துக்களே (ணகர, றகர, னகரம்) விகாரம் எய்தின. ஆதலின் விகாரத்திலும் ஒற்றுமை காணப்படுகின்றதென்று கூறுவது மிகையாகாது.

'ஶ' என்னும் எழுத்தை 'கா', 'சா' போல் எழுதினால் அது 'ணா' என்று எழுதுதல் வேண்டும்; இங்ஙனமே 'ஞ' எழுத்துக்கும் கண்டுகொள்க. றகரத்தின் காலை, கீழே கொண்டு வந்த பிறகு, திரும்ப, 'ா' என்னும் குறியை இடுவதற்கு முயற்சி அதிகம் வேண்டும். இவைகளை, குழப்பமன்றி, முயற்சியைக் குறைத்து, எழுதுவதற்காகவே, இவ் விகாரங்கள் ஏற்படுத்தப் பட்டனபோலும். இதை எழுதிப் பார்த்தால் அல்லது, இவ் விகாரத்தின் நலனை அறியமுடியாது. இங்ஙனமே, 'ணை லை, ளை, னை,' எழுத்துக்களும் சிறு விகாரங்கள் அடைந்துள்ளன. இத் தகைய மாறுதல்களுக்கு, இன்னும் தகுந்த காரணங்கள் இருக்கலாமென்று நம்புவதற்கிடமுண்டு. ஆகவே,

| | | | |
|---|---|---|---|
| உயிரெழுத்துக்கள் எழுதுவதற்குண்டான முயற்சி | | 7 | 20 |
| மெய்யெழுத்துக்கள் | .... | 8 | |
| உயிர்மெய்யெழுத்துக்கள்—பொது | .... | $1\frac{1}{2}$ | |
| உகர ஊகார விகாரங்கள் | .... | $2\frac{1}{2}$ | |
| ஶ, ஞ, ரு | ... | $\frac{1}{2}$ | |
| லை, ளை, ணை, னை | .... | $\frac{1}{2}$ | |

தமிழ் எழுத்துக்கள், மேற்காட்டியபடி, நம்முன்னோர் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகத் திருத்தி அமைத்த எழுத்து உருவங்கள் என்பதை மறக்கமுடியாது. எழுத்துக்களின் உருவங்களுக்கும் அவைகளின் உட்பொருளுக்கும் தொடர்பு என்னை என்பதை ஆராய்வது மாண்புடைத்து. இங்ஙனம், தொன்றுதொட்டு வழக்கிலிருந்து வரும் எழுத்துருவங்களை மாற்றுவது பயன்தராது. பேச்சு வழக்கிலிருந்தும் கெட்டொழிந்த பிற மொழிகளைப்போல், நமது மொழியும் நலிந்து நந்தாவண்ணம் பாதுகாக்க வேண்டியது நமது கடமை. அரிச்சுவடிதான் நம்முன்னோர் நமக்குத் தந்த விலைமதியாச் சொத்து.

தமிழ் எழுத்துக்கள், பற்பல உருவங்களோடு அமைந்திருப்பது ஒரு பேரதிசயம். நம் முன்னோர் அவ்வுருவங்களை,

தக்க காரணங்களோடேயே அமைத்துள்ளனர். இவை, நம் முன்னோரது பண்பாட்டையும், சமயக்கருத்துக்களையும், தெய்வீக நம்பிக்கையையும் அறிவதற்குச் சிறந்த கருவூலமாய்த் திகழ்கின்றன. இத்தகைய எழுத்து வடிவங்களைச் சிதையாது பாதுகாப்பது "மகன் தந்தைக்காற்று முதவி"யாகும். தமிழ் எழுத்தையே எழுதியறியாத மொழியாளர்களும், தமிழ் எழுத்தை எங்ஙனம் எழுதிப் பழக வேண்டுமென்பதை அறியாத ஆராய்ச்சியாளர்களும், ஒரே கட்சியைக்கேட்டு, மற்றொரு கட்சியின் உரிமையைக் கேளாமலே தீர்ப்புப்பண்ணும் நீதிபதிபோல, தமிழ் எழுத்துக்கள் ஆயிரத்தில் நாலில் ஒரு பங்கு என்று மயங்குவது மிகவும் வருந்தத்தக்கது. இவ் எழுத்துக்களை, குழந்தைப் பருவத்திலிருந்தே எழுதிப் பழகியவர்கள் போன்று, பிறரும் தமிழ்த்தாயுடன், சிறந்த உள்ளன்புடன் ஓயாது உறவு கொண்டாடி வருவார்களாயின் அவர்களது மயக்கந் தீர்ந்து உண்மை வெளிப்படும். அப்பொழுதுதான்,

"எழுத்தறியத் தீரும் இழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகும்—மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்"

என்னும் ஆன்றோரது வாக்கு, (மறைமொழி) நிறைமொழியாகின்றது. இம்மங்கல வாழ்த்தோடு முடிப்போம்.

இச்சிற்றுரையினின்று வெளிப்படும் பொருள் என்னை? தமிழ் எழுத்துக்கள்—249; 249 எழுத்துக்களும் எழுதுவதற்குப் பழகவேண்டிய குறியீடுகள் இருபதுக்கு உட்பட்டதே. இக்குறியீடுகளை நுணுகி நுணுகி ஆராய்வார்க்கு, இவை அனைத்தும் இரண்டு எழுத்தில் அடங்கும் என்பது கண்டு கொள்வர். ஒன்று விந்து (சுழி), மற்றொன்று நாதம் (வரி).

'நாத விந்து கலாதி நமோநம' என்பது அருணகிரி நாதரின் திருவாக்கல்லவா!

இவை இரண்டும் ஓரெழுத்தில் அடங்கும். அதுதான் 'ஓ,' ஓங்காரம் (பிரணவம்); என்றும் அழியாது நிலைத்திருப்பது. அண்டபிண்டங்கள் அனைத்தையும் தன்னுள் அடக்கியது. தமிழ்எழுத்துக்களை இருநூற்றுநாற்பத்தொன்பது என்று அஞ்சுவார்க்கு ஓரெழுத்தே உறுதுணையாய் நிற்கும்.

"காதலால் நம்மொழியைக் காப்பதன்றிக் கடுகளவும்
தீதில் பிறமொழியைக் கடுப்ப தன்றும்"

என்பதே எமது குறிக்கோள். இக்குறிப்புக்களை வினாவிடையாகவும் விளக்குதும்.

இக்கட்டுரையில், எழுத்தை எழுதப் பயிலும் முயற்சியை அளவாகக்கொண்டு, தமிழ் எழுத்துக்கள் இருநூற்று நாற்பத்தொன்பதையும் எழுதுவதற்கு வேண்டிய முயற்சி கணக்கிடப்பட்டுள்ளது. 249 என்றால், ஏறக்குறைய ஆயிரத்தில் காற்பங்காயிற்றே! இத்தனை எழுத்துக்களை எழுதக் கற்பது மிகக் கடினமாயிற்றே! இதற்கு ஒரு சுருக்க வழியில்லையா என்றெல்லாம் உண்மையறியாது மயங்குவார் பலர். இவர்களுக்கு இக்கட்டுரை தெளிவு தரும். கடந்த பத்தாயிரம் ஆண்டுகளாக, தமிழ்மொழி, நம் நாட்டில் நிலவி வருகிறதென்பது சரித்திர வரலாறு. அதற்கு முன்னர், எத்தனை பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் தமிழ்மொழி வழக்கிலிருந்தது என்பது சித்தர்களே அறிவர். இக்கட்டுரையில் அடங்கிய குறிப்புக்களை, இளைஞரும் எளிதில் அறியும்பொருட்டு, வினாவிடையாக இங்கு விளக்கப்பட்டுள்ளது.

நல்லாசிரியர் ஒருவரை ஆங்கிலம் படித்த தமிழ் மாணவன் வினவுகிறதாய் நினைத்துக்கொள்வோம்.

**மாணவன்:** தமிழ் எழுத்துக்கள் அடங்கிய இந்த அட்டவணையைப் பார்த்ததுமே, தமிழ் எழுத்துக்கள் 249 என்று சொல்லிவிடலாமே! இதற்குக் கணக்கு என்ன வேண்டும்?

**ஆசிரியர்:** அம்மையப்பனே, இங்கு எழுத்துக்களை கணக்கிடவில்லை. எழுத்துக்களை எழுதும் முயற்சியை கணக்கிடுகின்றோம் (The effort to write a letter = முயற்சி).

**மாணவன்:** எழுத்துக்கும், எழுத்தை எழுதும் முயற்சிக்கும் வேறுபாடு என்ன?

**ஆசிரியர்:** இவ்வேறுபாட்டை ஒரு சான்றினால் விளக்குதும்.

தமிழ் நெடுங்கணக்கு எழுத்துக்கள் 33; ஆனால் அட்டவணையிற் காண்பது 31 தான். உயிர்—12; மெய்—18; ஆய்தம்—1 ஆக 31. நீ, 31 எழுத்துக்களையும் எழுதப்படித்து விட்டாய் என்று வைத்துக்கொள்வோம். பின்னர் "க—கா—கி—கீ........க்" எழுதும்படி கற்பித்துக் கொடுக்கிறேன். அதை (முன் எழுதக் கற்றுக்கொண்ட) எழுத்துக்களுக்குத் தொடர்பு இல்லாததுபோல, 'க்' ஒரு தனியெழுத்தாகவா கூறுவேன்; இல்லை. அப்பா, உனக்கு 'க' எழுதத் தெரியுமல்லவா? 'க' மேல் ஒரு புள்ளி வைத்துவிட்டாயானால், அது 'இக்கென்ன' ஆய்விடும் என்றுதானே சொல்வேன். இம்மாதிரியேதான் 18 எழுத்துக்கள் க், ங், ச், ஞ்........ன் (மெய்—18). ஒரு புள்ளியால் எழுதிவிடலாம்.

**மாணவன் :** அப்படியானால், 18 மெய்யெழுத்துக்களையும் எழுதுவதற்கு, ஒரு புள்ளி (.) தானா நான் எழுதிப்படிக்க வேண்டும்? வெகு எளிதாயிற்றே, 216 எழுத்துக்களை எழுதுவதற்கும் 12 குறிகள் படித்தால் போதுமா?

**ஆசிரியர் :** எவ்வளவு குறிப்பாய் அறிந்துகொண்டாய். நீ சொல்வது கிட்டத்தட்ட உண்மைதான். ஒரு சில எழுத்துக்கள்தான் விகாரம்.

**மாணவன் :** அங்ஙனமாயின், பொதுவான குறிகளை முதலில் எடுத்துக்காட்டி விடுங்கள். பின்னர் விகாரங்களைக் கற்றுக் கொள்கிறேன்.

**ஆசிரியர் :** இதோ பார்— — —ஓம்.

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ | ஃ |
| ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ | ம் |
| . | ா | ... | ... | ... | * ... | ெ | ே | ை | ெ—ா | ே—ா | ெ—ள | . |

அகரத்துக்குக் குறி கிடையாது; மற்றைய 12 எழுத்துக்களையும் மேற் காட்டிய குறிகளினால் எழுதிவிடலாம்.

**மாணவன் :** ஐயா, இந்த 12 குறிகளையுங்கூடச் சுருக்கிக் கற்பிக்க வழி உண்டாயின் நலமாயிருக்குமே.

**ஆசிரியர் :** சற்றுக் கூர்ந்து நோக்குக. 'இ' ஏறிய உயிர் மெய்—எழுத்தைக் குறிப்பது 'ி'. அதோடு ஒரு சுழியை இணைத்துவிட்டால் அது 'ீ' 'மீ' ஆகிறது—மி, மீ. இங்ஙனமே, 'எ' ஏறிய எழுத்தைக் குறிப்பது 'ெ' என்பது. அத்துடன் ஒரு சுழியைச் சேர்த்துவிட்டால் (ஏ) 'ே' ஆய்விடுகிறது—மெ, மே. 'மு' ஒரு விலங்குபோல் மகரத்தைச் சுற்றி எழுதப்பட்டுள்ளது. அந்த விலங்கில் ஒரு சுழி சுழித்துவிட்டால் அது 'மூ' ஆகிறது. 'ஒ' 'ெ—ா' என்னும் குறியாலும், 'ஓ, ே—ா' என்னும் குறியாலும் சுட்டப்படுகின்றது—'மொ—மோ' ஆகவே குற்றுயிர்மெய்களை எழுதப் படித்துவிட்டால், நெட்டுயிர் மெய்களை ஒரு சுழியைச் சேர்த்து எளிதாய்ச் சுட்டிவிடலாம்.

* மகரத்தின் மேலும், பக்கத்தும் உள்ள இங்கு அமைய வேண்டிய குறிகளையே புதுவதாகக் கற்றுக்கொள்ளல் வேண்டும்.

மாணவன்: 216 எழுத்துக்களையும் எழுதுவதற்குக் குற்றுயிர் மெய்களுக்குள்ள, *'ி, ீ, ெ, ொ' குறிகளும் ஒரு சுழியும் படித்தாற் போதுமா?

ஆசிரியர்: 'சுழி' நீ எப்பவே கற்றுவிட்டாய். அகரத்தையே ஒரு சுழியிலேதான் தொடங்கினாய்—பிள்ளையார் சுழி 'உ' சுழியில்தானே தொடங்கினாய்—மற்றைய குறிகளைத்தான் பழகவேண்டும். 'ஔ' ஏறிய எழுத்துக்களுக்கு, 'ௌ' என்னும் குறியைக் கற்றுக்கொள்ளவேண்டும் (உ—ம்) 'கௌ, சௌ'.

மாணவன்: 216 எழுத்துக்களையும் எப்படியோ அதிகமாய்ச் சுருக்கி காட்டிவிட்டீர்களே!

ஆசிரியர்: தமிழ் எழுத்துக்களின் இயற்கை அமைப்பே அப்படியாகும். நான் வலிந்து சுருக்கிக் காட்டவில்லை.

மாணவன்; இதை ஒருவாறு அறிந்தேன்—சில எழுத்துக்கள் விகாரமடைகின்றன என்றீர்கள். அஃதென்னை?

ஆசிரியர்: பொது முறைக்குச் சிறிது மாறுபட்டது விகாரம்.

| | | |
|---|---|---|
| ஆ | ஒ | ஓ |
| ணா | ணொ | ணோ |
| றா | றொ | றோ |
| னா | னொ | னோ |

இந்த மூன்று எழுத்துக்களிலும் (ண, ற, ன) கா, சா, என்பதைப்போல 'ா' குறி சேர்த்து 'ஆ' ஏறிய உயிர்மெய் எழுதப்படவில்லை; ஒரு விலங்குபோல் சுற்றப்பட்டுள்ளது (உ-ம்) ணா, ணொ, ணோ, எழுத்துக்களும் அங்ஙனமே எழுதப்பட்டுள்ளன. இதேமாதிரிதான் 'ற' 'ன' எழுத்துக்களும் மாறுபடும். இந்த விலங்கும் 'ஆ' எழுத்தின் அடிப்பாகத்திலுள்ள வளைவுதான்.

மாணவன்: இது ஒன்றுதானா விகாரம்?

ஆசிரியர்: ஐ, சேர்த்து எழுதுவதில் ணை, லை, ளை, னை ஆகிய நாலெழுத்துக்களும் மாறுபடும்.

மாணவன்: 'ணை' என்னும் எழுத்திலுள்ள கொக்கி, யானை துதிக்கையைத் தூக்கியது போலிருக்கிறதே. வேறு விகாரங்களும் உண்டோ?

* இதன்கண் உள்ள உயிர் அடையாளங்களையே கொள்க.

ஆசிரியர் : உகரம் ஏறிய உயிர்மெய் யெழுத்துக்கள் பதினெட்டும்தான் சிறிது கடினம். அவை மூன்று விதமாய் எழுதப்படுகின்றன.

| (1) 6 | (2) 5 | (3) 7 |
|---|---|---|
| கு | சு | ஙு |
| டு | ஞு | ணு |
| மு | பு | து |
| ரு | யு | நு |
| ழு | வு | லு |
| ளு | | று |
| | | னு |

6+5+7=18

மாணவன் : ஊகாரம் ஏறும்பொழுது அது வேறே விகாரமோ?

ஆசிரியர் : இல்லை.

(டு, மு, ரு, ழு, ளு) ஐந்துக்கும் ஒரு சுழி சேர்த்தால் போதும். (உ—ம்) மு, மூ. இரண்டாவது வரிசைக்கு (சு, ஞு, பு, யு, வு), கீழ் ஒரு கோடு சேர்த்துவிட வேண்டும். மூன்றுவது வரிசைக்கு 'ா' போன்ற குறி ('ஙு, ணு, து, நு, லு, று, னு')யை இணைத்துவிடவேண்டும். லு, லூ, இது இரண்டும் எப்படிச் சேர்ந்துள்ளதென்பதைப் பார்த்தால் எளிதாய்த் தெரியும். 'கூ' மாத்திரம் 'க' உடன் 'உ' சேர்க்கவேண்டும்.

மாணவன் : இத்தகைய விகாரங்களே இல்லாமல் எழுதி விட்டால் என்ன?

ஆசிரியர் : நம்முன்னோர் எதையும் தக்க காரணமின்றிச் செய்வதில்லை—உனக்குத்தெரிந்தது அவர்களுக்கு 4000 ஆண்டுகளாகத் தெரியவில்லையென்று நம்புகிருயா? இதற்குக் காரணங்கள் பின்னல் தெரியும். எனக்குச்சில தென்படுகின்றன. ஆனல் அவை உறுதிப்படும் வரையிலும், அவைகளை உனக்குச் சொல்ல விருப்பமில்லை.

'ஓ' என்னும் எழுத்து எத்தனை வளைவுகளோடு எழுதப் பட்டுள்ளது! கோழிமுட்டை மாதிரி ஒன்றைப்போடத் தெரியாமலா இருந்தார்கள்! 'ஓ' என்னும் எழுத்து பல தூயபொருட்களை விளக்குகின்றது. எழுத்துக்களுக்கும் சமயத்துக்கும் தொடர்புண்டென்பதைக் காட்டுவதற்கு 'ஓங்காரம்' (பிரணவம்) ஒன்றே போதும். இவ் எழுத்து, 'ஓ' தமிழ்

மொழி மிகப் பழமை வாய்ந்தது என்பதைக் காட்டிக்கொண்டிருக்கும் கலங்கரை விளக்கமாக நின்றிலங்குகின்றது. இங்ஙனமே, எல்லா எழுத்துக்களுக்கும் மந்திரப் பொருள்களும் சமயத்தொடர்பும் உண்டென்று சித்தர் நூல்கள் கூறுகின்றன. எங்ஙனமாயினும், தமிழ் எழுத்துக்கள் 249 ஆயினும் அவைகளை எழுதும் முயற்சி மிகச் சுருக்கம் என்பது விளங்குகின்றதா?

## 249 என்னும் அச்சம்

**மாணவன்:** அச்சம் முக்கால்வாசிக்குமேல் ஒழிந்தது. ஆனால், ஆங்கிலத்தில் 'Capital, Small' என்று, வேறு வேறு எழுத்துக்கள் எழுதிப் படித்தேனே. அப்படி இன்னும் 249 எழுத்துக்கள் கற்கவேண்டுமே!

**ஆசிரியர்:** அந்த அச்சம் வேண்டாம்—தமிழில் பெரிய எழுத்து, சின்ன எழுத்து என்று கிடையாது. ஒரே எழுத்துத் தான்.

**மாணவன்:** நான் எழுத எழுத இன்னும் என்னென்ன ஐயங்கள் வருமோ அறியேன். ஆயினும் இவ்வமயம், தமிழ் எழுத்துக்களில் சமயப் பொருள் உண்டென்று கூறுவதை மாத்திரம் நன்றாக விளக்கிவிடுங்கள்.

**ஆசிரியர்:** தமிழ் நெடுங் கணக்கு எழுத்துக்கள் ஏதோ ஒரு கணக்கில் அமைந்துள்ளன. இரண்டொரு சான்று காட்டுதும்.

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ என்று குற்றுயிர்களின்பின் நெட்டுயிர்கள் வந்தன. இதோடு 'ஒ, ஓ' சேர்த்து எழுதிவிடப்படாதா. 'ஐ' எழுதியதற்கப்புறம், 'ஒ, ஓ, ஔ' என்று வந்துள்ளது. இதையெல்லாம் சிந்தனை செய்தல் வேண்டும். அப்பொழுது சமயப்பொருள் விளங்கக்கூடும்.

**மாணவன்:** அறிந்தேன்; அதேமாதிரி, வல்லினம் 6, மெல்லினம் 6, இடையினம் 6 என்று மெய்யெழுத்துக்களை வேறே வேறே எழுதாமல், கங, சஞ, டண, தந, பம 5 வல்லினம், 5 மெல்லினம் இவை, இனங்கள், இதற்கப்புறம் இடையினம் 6, இறுதியாக ற, ன (வல்லினம் 1, மெல்லினம் 1). இந்த முறையமைப்புக்குக் காரணம் ஐயாவிடம் கேட்கவேண்டுமென்றே யிருந்தேன்.

**ஆசிரியர்:** முருகா, நீ என்னைவிட அதிகக் கூர்மை. நீதான் மாணவனோ அல்லது நானோ? நீயே மந்திரமூர்த்தி. உனக்குக் கிடைத்துள்ள திருப்பெயரின் பயனைப் நீ என்னைவிட வெகு எளிதாய் அறிவாய், அறிவிப்பாய், நானே உன்னிடம் பாடங் கேட்கவேண்டியதிருக்கும்.

**மாணவன்:** எழுத்தைச் சுருக்கி உருவத்தை மாற்றி எழுத முடியாதோ?

**ஆசிரியர்:** 'கந்தனே', 'ஓ' என்னும் எழுத்தை மாற்றி எழுதுவாயானால் உலகமே பிறழும்—அதைப்பற்றி ஒரு பெரு நூலே எழுதவேண்டும்.

எழுத்தை மாற்றப்படாதென்று மாத்திரம் நான் கூற வில்லை. அகர முதலாய் னகர இறுதியாய் உள்ள எழுத்துக் களின் முறைமை (வரிசை) யைக்கூட மாற்றப்படாது. இவை களை மாற்றினால், தமிழ் தமிழாயிராது. "தமிழோடு இசை பாடல்" முடியாது. சமயக் கருத்தென்றால் என்ன? யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய கடவுட்கொள்கை என்பதுதான். அது தமிழ் எழுத்துக்களில் அடங்கியுள்ளது. இந்த உயிர் நாடியை மறந்துவிடாதே.

**மாணவன்:** மற்றைய மொழியெழுத்துக்களில் இத்தகைய கருத்துக்கள் இல்லையென்று உங்களுக்குத் தெரியுமா?

**ஆசிரியர்:** அங்ஙனம் நான் சொல்லவேயில்லை. எல்லா மொழிகளிலும், எழுத்துக்கள் எல்லாம், சமயக் கருத்துக்க ளோடுதான் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பது எமது நம்பிக்கை. இறைவன் திருவருள் புரிவாராக.

வாழ்க செந்தமிழ். முருகா வருக.

---

## தலைவி பிரிவச்சம்

காதலன்பிற் பிணிப்புண்ட தலைவன் பொருளீட்டப் பிரிந்தான். அவன் பிரிவு தலைவியின் நெஞ்சை நெருப்பிலிடு வெண்ணெய் என உருக்கியது; கரைந்து நைந்தாள்; அதை அறிந்தாள் அவள் உயிர்த்தோழி; அவளுக்குத் தேறுதலாகத் தலைவன் சென்ற வழியின் கொடுமையை விளக்கிக் கூறினாள். அவள் 'என் அன்பே! நீ என்ன அவர் பிரிவுக்கு வருந்து கின்றாய்! அவர் சென்ற வழியின் சிறுமை உனக்குத் தெரியுமா? கொடுங்காடு; அங்கே சிறு சிறு குண்டுகள்; அவற்றில் கலங்கிய சிறு நீரே உண்டு. அக்காட்டில் மான்கள் ஆணும் பெண்ணும் நீரருந்தும் காட்சியைக் கூறுகின்றேன்' என்று சித்திரிக்கின்றாள். அதைக்காட்டும் ஓர் ஓவியம்:

"சுனைவாய்ச் சிறுநீரை எய்தாதென் றெண்ணிப்
பிணைமான் இனிதுண்ண வேண்டிக்—கலைமாத்தன்
கள்ளத்தின் ஊச்சும் சுரமென்பர் காதலர்
உள்ளம் படர்ந்த நெறி." (ஐந்திணை ஐம்பது: ௩௮)

—செல்லூர்க்கிழார்.

# மகிழ்ச்சிக்கு எல்லை

[செல்லூர்க்கிழார், திரு. செ. ரெ. இராமசாமி பிள்ளை]

தன்னேரில்லா எம் தமிழ்மொழிக்கு ஆக்கந்தந்து வளர்த்தோர் சங்க காலத்துச் சான்றோராவர். அவர்கள் தாம் நேரிற் கண்ட பொருள்களைக் கண்டவாறே கட்டுரைப்பர். இயற்கைக் காட்சிகளைப் புனைந்துரையாக நவிலாது உண்மையாகவே உரைப்பர். அவர்கள் பாடல்கள் முழுதும் துருவித் துருவிப் பார்த்தால் வெற்றுச் சொற்களோ பொருந்தாத சொற்களோ காணக்கிடப்பது அரிது. பிற்காலத்தவர் போல எதுகைமோனை நோக்கி அவர்கள் பாப் புனையவில்லை; பொருளொன்றே அவர் தம் குறிக்கோள். கண்ட பொருள்களை விளக்கிக்காட்டுவதில் வல்லுநர். புல் நுனியில் தங்கிய பனிநீர் மலையையும் தன்னகத்து அடக்கிக்காட்டுவது போல், திட்ப நுட்பஞ் சிறப்பச் சுருங்கிய அளவில் விரிந்த பொருள்களை அடக்கிக் கூறுவர்.

இம் முறையில் இயன்றனவே பத்துப்பாட்டும் எட்டுத் தொகையும் பதினெண்கீழ்க்கணக்கு முதலாம் நூல்களும் ஆகும். இவைகளுட் காணப் பெறும் உவமநயங்கள், இயற்கைக் காட்சிகள், காதற் கருத்துக்கள், வீரப் பண்புகள், அன்பின் சிறப்பு, அறத்தின் உயர்வு முதலாம் அரிய கருத்துளவான தமிழ்ப் பண்பாடுகளை யெல்லாம் இவைகளுட் காணலாம். இந்த முறையில் அகப்பொருள் புறப்பொருள் நிலைகளைப் படம்போல் விளங்கக் காட்டிச் செல்வர். காதல் துறைகளைக் கற்றோருள்ளம் களிகொள்ளுமாறு உரைப்பதில் எம் தமிழாசிரியன்மாரை ஒப்பார் யாண்டுளர்? நம் தமிழ்மக்கள் வேற்றுமொழி மயக்கத்தால்—நாகரிகத்தால் இவைகளை மறந்து இந்நூல்களைத் தொடுதற்கும் அஞ்சினர். அதனால் இச்சான்றோரோடு உறவாடும் வாய்ப்பையும் இழந்தனர்; ஐயகோ! பிற மொழியாளன் எம் தமிழ்ச்சுவை யுணர்ந்து அதன் உண்மையை—சிறப்பியல்பை வாயாரப் புகழ்கின்றான். நம்மோன் அவன் சொல்ல அறிகின்றான்; தமிழில் இப்படியுமா! இருக்கிறதென்று வியக்கின்றான். என்னே தமிழன் அறியாமை!

நாம் செல்வமென்று எதைப் போற்றுகின்றோம், மண்ணை மரத்தை மாட்டை யாட்டைப் பொன்னையன்றோ? எம் தமிழ்ச் சான்றோர் அவைகளை முதன்மைப் பொருள்களாகக் கொண்டனரில்லை. அறத்தைக் கொண்டனர்; அன்பைக்கொண்டனர்; மானத்தைக் கொண்டனர்; வீரத்தைக் கொண்டனர். நல்வெள்ளியார் என்னும் புலவர் பெருமகனார், தலைமகனைத் தோழி நெருங்கிச் சார்ந்து சொல்லுவதாக ஓர் இயற்கை நுட்பத்தைச்

—செல்வத்தை உணர்த்துகின்றார். அவர் கூறுகின்றார், மிகப் புகழுரைக்கு இடனுடையராக இருப்பதும், நினைத்த இடத்துக்கு விரைந்து செல்லும் குதிரைபோன்ற ஊர்திகளையுடையராக இருத்தலும் செல்வம் என்று கூறுதல் பொருந்தாது ; பின் எது செல்வம் எனின் ? பிறர் துன்புற்ற காலத்தில் அத்துன்பத்தை நீக்க உடனே விரைந்து சென்று உதவும் மெல்லிய அருளிரக்கமே செல்வமென்று உயர்த்துச் சொல்லப்படும் என்கின்றார். அப் பொன்னுரை வருமாறு :

“.............. ..............
நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்
செல்வம் அன்றுதன் செய்வினைப் பயனே
சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கண் செல்வம் செல்வம்என் பதுவே.” (நற்றிணை: உ௪0.)

இதில் ‘பிறர் புன்கண் அஞ்சும் பண்பின்........செல்வம்’ என்பது எவ்வளவு கருத்து நயம் கொண்டது பார்மின் ! இப் பண்பு யாரிடத்துப் புலனும்? தமக்கென வாழாப் பிறர்க்குரியாளரிடத்தன்றோ ! இதனைச் செல்வம் என்று போற்றுகின்ற நிலையைக் காண்மின் ! எம் தமிழர் கைம்மாறு பேணுக் கடப்பாட்டை ஓர்மின் ! இனிக் குறித்த பொருளைக் காண்பாம்.

ஒருதலைவன் தலைவியை மணஞ்செய்தற்கு ஏற்றுக்கொண்டான்; அதனை அவள் தோழி அறிந்தாள் ; அவட்கு அத்தலைவன் தன் தோழியை மணத்தலே சிறப்பெனக் கருதினாள். அத்தலைவியும் அத்தலைவனையன்றி வேறொருவனை மணத்தல் இல்லை என உறுதிபூண்டிருந்தாள். இந்நிலையில் இவ் விருவர் எண்ணமும் ஒருவாறு முற்றுற்றது. இம் மகிழ்ச்சியைத் தோழியால் அடக்கிக்கொள்ள இயலவில்லை. அதைத் தலைவிக்கு அறிவிக்கக் கருதினாள். கருதியவள் தன் உள்ளத்தைக் கொள்ளைகொண்டெழுந்த மகிழ்ச்சிக்கு ஓர் வரையறை காட்டிச் சொல்ல நினைத்தாள். அவட்கு இதற்குமுன் மழையில்லாமையால் நிகழ்ந்த கொடிய பஞ்சகால நினைவு வந்தது. அந்தக் காலத்தில் மக்களும் மற்றெல்லா வகை உயிர்களும் உண்ண உணவும் குடிக்க நீரும் இன்றி வருந்திய கொடிய துன்ப நிலையையும் எண்ணினாள். பின்னர் ஒருநாள் இரவு மேகங்கள் திரண்டு மேலெழுந்து நீரைக் குடத்திலிருந்து சாய்த்ததுபோல் நீரைப்பொழிந்து நாடு செழிக்கப் பெய்த மழையையும், அதனால் உயிர்கள் அடைந்த மட்டில்லாத மகிழ்வையும் கருதினாள். இவைகளைக் கருத்தில் வைத்து அவட்குத் தன் மகிழ்ச்சிக்கு எல்லைகாட்டி உணர்த்துவாளாயினாள். அம் மகிழ்ச்சிப் பொங்குதலே இக்கட்டுரைத் தலைப்பு. அவள் பேசிய பேச்சு வருமாறு :

'என் அன்புடைத் தோழி! முன்பு நம் நாடெல்லாம் கொடிய பஞ்சம்வர மழைபெய்யாதிருந்தபோது, உழுது பயிர் செய்யும் கலப்பைக்கு உழவேண்டும் வேலையே இல்லை. கலப்பை யெல்லாம் வீட்டிலேயே தூங்கிக்கிடந்தன; கார் கூதிர் முன் பனி பின்பனி இளவேனில் முதுவேனில் என்னும் அறுவகைப் பருவமும் மாருமல் ஒரே பருவமாகக் கோடையாகவே இருந் தது; பச்சைப் பசேல் என ஒளிரும் புல் பூண்டு பயிர்கள் எங்குமே காண்பதற்கில்லை; மலைபோல் உயர்ந்த கரைகளை யுடைய ஏரிகள் எல்லாம் நீர் இன்றி வற்றி வறண்டு இருந்தமை யால் நீர்வாழ் பறவைகளான நாரை கொக்கு உள்ளான் தாரா சிறகி முதலியவைகள் ஒன்றுமே அங்கே வருதற்கில்லை; அவைகளைக் கண்ணுற் பார்க்கவும்கூட முடியாதநிலையில் அரு கின; அவ் ஏரிகளின் உள்ளிடத்தில் பிளப்பு ஓடிக் கானல் வெப்பமே மிகுந்திருந்தது. இக்கொடிய நிலையில்—நினைப்பினும் கொதிக்கும் கோடை வாட்டியகாலத்தில், ஒருநாள் இரவு-நள்ளிர வுப் பொழுதில்-மேகங்கள் திரண்டெழுந்தன அல்லவா? அன்று பெய்தமழை உனக்கு நினைவில் இருக்கிறதா? அன்று பெய்த மழையினுல் குளம் குட்டைகள் ஏரிகள் எல்லாம் நீர் பெருகிக் கரைகளை உடைத்துக்கொண்டு சென்ற காட்சி என் கண்முன் தோன்றி எனக்கு இன்னும் வியப்பையும் பெருமகிழ்ச்சியையும் ஊட்டுகின்றது. உனக்கும் அவ்வாறே இருக்கலாமெனக் கருது கின்றேன். அன்று நாம்கொண்ட மகிழ்ச்சிக்கு அளவுண்டா? இங்குள்ள மக்கள் யாவரும் கொண்ட மகிழ்வுக்குத்தான் அள வுண்டா? விலங்குகள் பறவைகள் மற்ற எல்லாவகை உயிர் களும் அடைந்த பெருமகிழ்வுக்குத்தான் எல்லையுண்டா? இல்லை யென்பதை நீ நன்கறிவாய். அன்று விடியற்காலையில் எழுந்து புலங்களிற் சென்று பார்த்தபோது செத்துக்கிடந்த புல் பூண்டுகளெல்லாம் பச்சைப் பசேலெனத் தலையெடுத்து நின் றன. அவைகட்கெல்லாம் எவ்வளவு மகிழ்ச்சி. அன்று புற் பூண்டு செடி கொடி விலங்கு பறவை மக்கள் முதலிய யாவரும் அடைந்த மகிழ்ச்சியெல்லாவற்றையும் ஒன்றுகச் சேர்த்து என் மனதில் அடைத்துத் திணித்துவைத்ததுபோன்ற பெருமகிழ்வு நான் கொண்டுள்ளேன். உனக்குத் திருமணம் என்று கேட் டேன்; அதுவும் நாம் குறித்த காதலன் என்றே அறிந்தேன்; என் உள்ளம் குளிர்ந்தது; உடல் சிலிர்த்தது; மகிழ்ச்சியால் உடல் விம்மினேன். என்னுல் இம்மகிழ்ச்சியைத் தாங்கக் கூட வில்லை; அதற்கு ஓர் எல்லையும் கண்டேனில்லை; ஆ! என்ன! மகிழ்வு! என்ன மகிழ்வு! நீ உன் காதலனுடன் கட்டுற்ற காதல் வாழ்க்கையில் பின்னிப் பிணைத்துக்கிளைத்துப் படர்கவென மகிழ் பொங்கியோட வாழ்த்துகின்றேன்' என்று வாழ்த்தி நின்ருள்.

இப்படத்தைச் சித்திரித்துக் காட்டுகின்ற புலவர் பெருமகனார், கபில ரென்பார். அது:

> "..................................
> நாடு வறங்கூர நாஞ்சில் துஞ்சக்
> கோடை நீடிய பைதறு காலைக்
> குன்றுகண் டன்ன கோட்ட யாவையும்
> சென்றுசேக் கல்லாப் புள்ள உள்ளில்
> என்றூழ் வியன்குளம் நிறைய வீசிப்
> பெரும்பெயல் பொழிந்த ஏம வைகறைப்
> பல்லோர் உவந்த உவகை எல்லாம்
> என்னுள் பெய்தந் தற்றே......" (அகம் : ௪௨)

என்பதாகும்.

இதில் எவ்வளவு கருத்து நுணுக்கங்களை உவமவாயிலாக உணர்த்தியுள்ளார் பார்மின்! தோழிகொண்ட மகிழ்வுக்கு எல்லையாக எதைக்காட்டியுள்ளனர். மழையின்றித் தத்தளித்த உயிர்களுக்கு மழை பொழிந்தபோது எவ்வளவு மகிழ்வுண்டாகும்; அளப்பிட்டுரைக்கலாகுமோ? அதுகாலை மகிழ்வடையாத எந்த உயிர்களும் உண்டா? ஓரறிவுயிர்முதல் ஆறறிவுயிர்களான மக்கள்வரை நீரை விரும்பாத—நீரின்றிவாழும் உயிர்களுண்டோ? இல்லையன்றோ? எவ்வளவு சிறந்த உவமை. இந்த எல்லா உயிர்கள் அடைந்த மகிழ்வெல்லாவற்றையும் ஒன்றுகூட்டினால் எவ்வளவு அளவு வரையறையின்றிப் பெருகுமோ? அவ்வளவு வரையறை இல்லாத மகிழ்வென்பதைக் குறிக்கும் இவ் வரிய உவமநயத்தை என்னென்பேம்! என்னென்பேம்! யாதுகூறிப் புகழவல்லேம்!

இவ்வுவமம் ஒப்பக் கலித்தொகையில் மருதன் இளநாகனார் காட்டிய உவமத்தையும் இதனோடு ஒப்பவைத்து மகிழ்ந்து இம் மகிழ்ச்சி எல்லைக்குக் கால்கோள் நிறுவுவாம். அது :

> "..................................
> மாரிக்கு அவாவுற்றுப் பீள்வாடும் நெல்லிற்காங்கு
> ஆராத் துவலை அளித்தது போலும்நீ
> ஓர்யாண்டு ஒருகால் வரவு." (மருதக்கலி : ௬)

இவ்வாறு, மணற்கிளைக்க நீரூறுமாப்போல் சங்கநூற் கேணியைத் தோண்டத் தோண்ட, நுண்பொருள் நன்னீர் சுரந்து அறிவுடலை உயர்த்தும். சங்கநூற் சொற்கள் பழங்காலச் சொற்களாக இருப்பதால் கலவை கூட்டுண்ட நமக்கு விளங்காதனபோல் தோன்றும். பயின்றால் மிக எளிது; நல்லது; சிறப்புடைத்து; அவ்வழிப் படர்க; பயில்க என, எம் தமிழ்ப் பெருமக்களை வேண்டுவல்.

வாழ்க சங்கநூல்! வாழ்க தமிழ்மொழி!

# கல்வெட்டுதவி

[திரு. ஔவை - சு. துரைசாமி, மதுரை]

மக்களில் தலைமைப் பண்புகளெல்லாம் நிறைந்த ஆண் மகனொருவன், தன் மனம் காதலித்த நங்கை யொருத்தியைக் கண்டு திருமணம் செய்துகொண்டான். அந்த நங்கையும் மகளிருள் தலைமை நலங்களெல்லாம் நிறைந்து தலைமகனோடு ஒத்த பண்பும் செயலும் உடையவள். இவ்விருவர்க்கும் இனிய முறையில் உண்மை நட்புற்ற மங்கையொருத்தி தோழியாக அமைந்திருந்தாள். அறிவே அவளது உரு; அன்பே அவளது மொழி; அறமே அவளுடைய செயல். இந்த நன்மக்கள் ஒருங்குகூடிச் செய்த இல்வாழ்வில் "இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை".

இவர்கள் வாழ்வில் புதுமணவாழ்வு கழிந்தபின், தலைமகன் மனையினின்றும் நீங்கிச் சென்று செய்யவேண்டியதொரு கடமையுடையனானன். புறத்தே சென்று செய்வன செய்து பொருளையீட்டி வந்து மனைக்கண் தொகுப்பது ஆடவனுக்கு அறம்; அதுகொண்டு அறத்துறை, பொருட்டுறை முதலிய துறைகளில் பயன்படுத்தி இம்மையில் புகழ் வளர்ப்பது மனையாட்கு அறம். நாளும் ஆள்வினை மழுங்க இல்லின்கண் இருந்து அமைவோனுக்குப்புகழ் இல்லையென்று தானே தமிழர்பொருணூலும் கூறுகிறது. இசையுண்டாக வாழ்வதுதான் உயிர்க்கு உலக வாழ்வில் உண்டாகும் ஊதியம்.

இந்நிலையில் தலைமகன் தன் கடமை குறித்துப் பிரிந்து சென்று வரவேண்டிய தனது நிலையினைத் தன் காதலிக்குநேரில் கூற முதற்கண் அஞ்சித் தோழியிடம் தெரிவித்தான். அஃது அவனுக்கு அறம் என்பதை நன்கு அறிந்தவளாதலால், தோழி அதனை மெல்லத் தலைமகளுக்குத் தெரிவித்தாள். தலைமகன் செயல் அறமாகவும் அதன் விளைவு பொருளும் புகழுமாகவும் இருப்பது கண்ட தலைமகள் அவன் செல்வதற்குத் தன் உடன்பாட்டைத் தெரிவித்தாள். தலைமகன் பிரிதற்குக் குறித்த நாள் நெருங்கிற்று. தலைமகன்பால் தலைவிக்கிருந்த காதல் அளவைத் தோழி கண்டாள். காதல் வாழ்வுக்குப் பிரிவினும் பெருந்துன்பம் தருவது வேறில்லையே; காதலே வடிவாக இருக்கும் இந்நங்கை எவ்வாறு தலைவன் பிரிவை ஆற்றுவாள் என எண்ணித் தனக்குள் கவற்சி கொண்டாள். குறித்த நாளில் தலைமகனும் பிரிந்து சென்றான்.

ஒரு சில நாட்கள் கழிந்தன. தலைமகள் உடலில் மெலிவும், உள்ளத்தில் கவலையும், உரையில் கையறவும் தோன்றின.

காதலன் நினைவே அவள் மனத்தைக் கவர்ந்துகொண்டது. கண்ணுறக்கமும் குறைந்தது. "தன் மனக்கினிய காதலி; தன்னை நினைந்து கையறவு கொண்டு கண்ணீர் உகுக்கின்றாள் எனின், உடனே கடிதில் வந்து அவள் கண்ணீரைத் துடைத்துக் களிப்புறச் செய்வது கடமை. நம் காதலர் அது செய்கின்றார் இல்லையே, என் செய்வது?" என்றாள். இச் சொற்களைக் கேட்டாள் தலைமகள். "நம் காதலர் கடமையறியாதவரா? இவள் கூறுவது கேட்டு அமைந்திருப்போமாயின், அவர்க்கு யானும் கடமையறியாதவரென்பதை உடன்பட்டேனாவேன்" என்று எண்ணினாள். "தோழி, நம் காதலர் நல்லவை யெல்லாம் கடன் என்பவர். கடமை கருதியே இப்போதும் சென்றிருக்கின்றார்." என்றாள். தோழி, "சான்றோர்க்குக் காதலினும் கடமையே பெரிது," என்றாள். தலைவி, "நம் காதலர் கடமையையும் காதலையும் ஒப்பக் கருதுபவர், காலமும் இடனும் நோக்கி இரண்டனுள் சிறப்பதைச் செய்வது அவரது இயல்பு" என்று இசைத்தாள். அது கேட்டதும், கண்கள் நீர் சொரிய அவரது பிரிவாற்றாது வருந்தும் இந்நிலையில் அவர் வந்து உனது வருத்தத்தை மாற்றாராய் இருப்பது எனக்கு மிக்க வருத்தம் தருகிறது" என்றாள் தோழி.

இச் சொல்லாடல் முடிவில் தலைமகளின் மனம் பலப் பல எண்ணத் தொடங்கிற்று. "நம் காதலர் கடமை அறியாதவரா? காதல் வாழ்வைக் காணாதவரா? நம்பால் அன்பு குறைந்தனரா? எனத் தனக்குள் எண்ணினள். நெஞ்சு நெகிழ்ந்தது; கண்கள் நீரைத் துளித்தன. உடனே, தோழி, அவள் கண்ணீரைத் துடைத்தாள்; தலைமகள், தோழிக்கு இடம் தராது தானே துடைத்துக்கொண்டாள். தோழிக்கு அவள் கருத்து விளங்கவில்லை; திகைப்புற்றாள். தலைமகள் தன் வாயைத் திறந்து, "என் நெஞ்சு வருந்துகிறதே! என் கண்ணிமையை வெதுப்பித் தீய்ப்பதுபோலக் கலுழ்ந்துவிழும் கண்ணீரை உடனே துடைத்து இனியசொல் செயல்களால் மகிழ்வித்தலைச் செய்பவர் என் காதலர்; அதற்கென்றே அமைந்தாற்போலும் அன்புருவினர்; அவரை, அவ்வாறு அமைந்தவரில்லை என்ற சொற்களைக் கேட்கக் கேட்க என் நெஞ்சு மிக மிக வருந்துகிறது" என்றாள். தோழிக்கு முகத்தில் மகிழ்ச்சியால் புன்னகையும் மனத்தில் வியப்பும் உண்டாயின.

இந்நிகழ்ச்சியை ஒரு சான்றோர் தமது மனக் கண்ணில் கண்டார். அதன்கண் காதல் வாழ்வில் பெண்மையின் பெருந்தகைமை சிறந்து நிற்பது புலனாயிற்று. அவர் புலமையுள்ளம் பெண்மையுள்ளமாக மாறிற்று. ஏட்டை எடுத்தார்; எழுத்

தாணியை நாட்டினர்; அழகிய பாட்டொன்று எழுதப்பட்டது. அது,

"நோம்என் நெஞ்சே நோம்என் நெஞ்சே
இமை தீய்ப்பன்ன கண்ணீர் தாங்கி
அமைதற்கு அமைந்த நம்காதலர்
அமைவில ராகுதல் நோம்என் நெஞ்சே." (குறுந்: ௪)

என்பது. காதலன் பிரிவினல் உண்டாகும் மனவேதனை காரணமாகக் கண்ணீர் ஒழுகுகிறது; அதனுல் அது வெப்ப மிகுந்திருக்கிறது. அவ்வெப்பத்தால் கண்ணிமையும் தீய்ந்து விடுவதுபோல் இருப்பது பற்றி, "இமை தீய்ப்பன்ன கண்ணீர்" என்று அது குறிக்கப்படுகிறது. அமை விலராகுவல் என்ற விடத்து ஆகுதல் என்பது, சொல்லப்படுவது என்னும் பொருள் தருவது. இனி இப்பாட்டைப் பாடிய சான்ருேர் யார்? இவர் பெயர் குறுந்தொகை யென்னும் சங்க நூலில் காமஞ் சேர் குளத்தார் என்று காட்டப்படுகிறது. இந்தப் பாட்டை அச்சிட்டு வெளியிட்டவர் ஐவர்; அவருள் இவர் பெயர் நிலையை எண்ணியர் மூவர்; அவர்கள் சௌரிப்பெருமாள் அரங்கன், டாக்டர். உ. வே. சாமிநாதையர், மகாவித்துவான் ரா. இராகவையங்கார் அவர்கள் ஆவர். இவருள், முதல் இருவரும் இச் சான்ருேரைப்பற்றி ஒன்றும் கூறவில்லை. ஆயினும் டாக்டர் உ. வே. சா. ஐயரவர்கள், இப் பெயர், "காமஞ் சொகினத்தார் என்று ஊகித்துப் படித்தற்கும் இடமுண்டு" என்று உரைத்துள்ளார். திரு. ரா. இராகவையங்காரவர்கள், "பிரிந்தாரைக் காமத்திற் சேர்க்கும் குளம் உண்டு என்பது புகாரிலுள்ள இரு காமத்திணையேரி (பட்டி. 39) வரலாற்ருல் அறியப்படுவது; அக் குளக்கரையில் வதிந்தவர் இவராவர்" என்று குறித்துள்ளார்.

சங்க நூல்களில் காணப்படும் ஊர், மலை, ஆறு முதலியவற்றின் தொன்மைகளை அறிந்துகொள்ளுதற்குப் போதிய சான்றுகள் இப்போது கிடைப்பது அரிதே; ஆயினும், சுமார் 1000 ஆண்டுகட்கு முன்பு நம் தமிழ் நாட்டை ஆண்ட அரசியலார் நாட்டிலும் ஊர்களிலும் நிகழ்ந்த சிறப்புடைய நிகழ்ச்சிகளைக் கல்லிலும் செம்பிலும் என்றும் நிலைபெறவேண்டி வெட்டி வைத்துள்ளனர். செம்பில் வெட்டினவை செப்பேடு என்றும், கல்லில் வெட்டியவை கல்வெட்டு என்றும் வழங்கும். செப்பேட்டிலும் கல்வெட்டுகள் எண்ணிறந்தவை. இவற்றை முன்பு அரசு புரிந்த ஆங்கில அரசினர், ஆங்காங்கே தேடிக்கண்டு படியெடுத்து வைத்துள்ளனர். அவற்றுள் 1903-ம் ஆண்டுவரை எடுக்கப்பட்டவை நூல் வடிவில் வெளியாகி இருக்கின்றன. அதற்குப்பின் 1938-ஆம் ஆண்டுவரை எடுக்கப்பட்டவை அரசியல் ஆண்டறிக்கைகளில் சிறு சிறு

குறிப்புக்களாக வெளிவந்தன. இப்போது அந்தச் சிறு குறிப்புக் களுமே நின்றுவிட்டன. நாட்டு வரலாற்றில் அக்கரையில்லாமை யாலோ, அந்த வரலாற்றைச் செம்மையாகக் காண்பதில் விருப்பம் இல்லாமையாலோ வேறு எதனாலோ, இவற்றை வெளியிட்டு நாட்டு மக்கள் எளிதில் பெற்று நாட்டின் வரலாற் றறிவைப் பெறுவிக்க வேண்டுமென இன்றைய அரசியல் தலைவர்கள் எண்ணமில்லாமல் இருக்கின்றனர்.

இந்தக் கல்வெட்டுக்களையும் கல்வெட்டுக் குறிப்புக்களையும் படிப்போமாயின், நாட்டு மக்களின் பொது வாழ்க்கைப் பண்பும், நாட்டின் நலம் குறித்து அரசியலாரும் செல்வர்களும் செய்திருக்கும் தொண்டும் புலப்படுகின்றன. அவற்றின் ஊடே, அந்நாட்களில் இருந்து இப்போது மறைந்துபோன ஊர்ப்பெயர்களும் வேறு பல செய்திகளும் தெரியவருகின்றன. சங்ககாலச் சான்றோர் சிலருடைய ஊர்ப் பெயரும் இவற்றால் தெரியவருகின்றன.

இது கொண்டு கல்வெட்டுக்களைப் படித்தால் இக் காமஞ் சேர் குளத்தாரைப்பற்றிய செய்தி ஏதேனும் கிடைக்குமெனக் கருதி அவற்றைப் படித்ததில் திருக்குற்றாலத்தில் உள்ள கல் வெட்டுக்கள் களக்குடி நாட்டில் சுமார் 800 ஆண்டுகட்கு முன் திருக்காமஞ்சூர்க்குளம் என்றோர் ஊர் இருந்தமை (A. S. 443 of 1917) தெரிவதாயிற்று. ஆகவே, காமஞ்சேர்குளத்தார் என் னும் புலவர் இந்தத் திருக்காமஞ்சூர்க்குளம் என்னும் ஊரினர் என்று விளங்கும். திருக்காமஞ்சூர்க்குளம், காமஞ்சூர்க்குளம் என வழங்குவதற்கும் இடமுண்டு. திருக்குற்றாலத்தைக் குற்றாலம் என வழங்குவதுண்டன்றோ! அது போல இதுவும் காமஞ்சூர்க்குளமெனவும் வழங்கியிருக்கும். அந்த ஊரினராத லால் இச்சான்றோர் காமஞ்சூர்க்குளத்தார் என வழங்கப்பட் டார். ஏடெழுதினோர் இவர் பெயரைக் காமஞ்சேர்குளத்தார் என எழுதியிருக்கலாம். எனவே, “நோமென்நெஞ்சே” எனத் தொடங்கும் இக்குறுந்தொகைப் பாட்டைப் பாடிய சான்றோர் திருக்காமஞ்சூர்க்குளத்தார் என்றும், காமஞ்சேர்குளத்தார் என்றோ காமஞ்சோகுளத்தாரென்றோ, காமஞ்சோகினத்தார் என்றோ கருதுதல் வேண்டா என்றும் கொள்ளலாம். இதனால் திருக்குற்றாலத்துத் திருக்கோயிலில் உள்ள அழகிய கல் லொன்று தன்மேல் எழுதிய எழுத்தைக் காட்டிச் சங்ககாலச் சான்றோர் ஒருவருடைய உண்மைப் பெயரை இன்று நாம் அறிய உதவிய சிறப்பினை அரசியல் உரிமை பெற்று மகிழும் இந்த நன்னாளில் நினைந்து இன்புறுவோமாக.

# பாண்பசிப் பகைஞன்

[திரு. க. குமரன், குடியேற்றம்]

தமக்கென வாழாப் பிறர்க்கென வாழும் பெற்றி பெற்று, என் கடன் பணிசெய்து கிடப்பதே எனத் தொண்டாற்றி, 'விருந்தோம்பும் வேளாண்மை செய்தற்கே இல்லிருந்து வாழ்வது' என்னும் இயல்பைப் பெற்று, தம்மில் இருந்து தமது பாத்துண்ட தமிழ் மக்களின் பெருமை மிகப்பரந்தது—சாலச் சீரிது. ஆயின், பண்டை நாளில் அஃதாவது இற்றைக்கு ஆயிரத்து எண்ணூறியாண்டுகட்கு முன்னர் விளக்கங் கூறத் தேவையில்லாமல் நிலைபெற்றிருந்த—தன்னியல்பிற் றிரியாது எல்லோர்க்கும் குடிப்பண்பாக விளங்கிய—அப்பழம்பெருமை இற்றைக்கு மாறியிருக்கிறது. அஃது என்னோ?

பிறர்க்கென வாழாதும், தானும் நிறைய உண்ணாதும் சேர்த்துவைக்கும் எலிநோக்குடைய மக்களின் குடியேற்றத்தால், இடம் வீழ்ந்ததையுண்ணாத புலிநோக்குப் பெற்ற—தமக்கெனக்குறிக்கோளுடைய தமிழ்மக்களின் மொழி, பழக்க வழக்கங்கள், அரசியல் முதலிய யாவும் நிலைதளர்ந்து அழிந்தொழிந்தன. அதனால் என் னருந்தமிழ்ப்பண்பு இன்று நினைவூட்டும் நிலையிலே இருக்கிறது. இஃது அளித்து! என்னே!

அந் நாளைய ஒரு வீரன் இக்கட்டுரையின் வாயிலாகத் தமிழ் மக்களின் மனக்கண்முன் தோன்றி 'என்னுடைய பரந்த நோக்குடைய உள்ளவிரிவுக்கும், என்வழி வந்த உங்களுடைய புன்மதியுள்ளக் குறுக்கத்திற்கும் வேற்றுமைதான் என்னே!' என இகழ்ச்சிக் குறிப்போடு புன்முறுவலிப்பதைக் கீழே நோக்குமின்.

பேரரசனின் படையில் ஒரு படைத்தலைமை பூண்டோன், படையில் மடம்படாப் போராற்றல் மிக்கோன், தன் தலைவனுக்கு வரும் சிறுசிறு இடையூறுகளையும் தனக்கென ஏற்றுப் போர் புரியும் மறவன், 'தலைவன் வெற்றி தன் வாழ்வு; தலைவன் தோல்வி தன்னுடை வீழ்வு' என எண்ணிப் போர் செய்து இரும்பு சுவைத்த ஊனுடலைப் பெற்றான்.

'இரும்பு சுவைத்த' என்பதைக் கருதுக. நாம் ஒரு உணவுப் பொருளைச் சுவைத்துண்டல் என்றால் அதன் முழுச் சுவையையும் பொறுமையாக நாக்கறியுமாறு நன்றாகமென்றும், சப்பியும் உண்ணலாமன்றே? அதுபோல அவ்வீரனுடைய உடல் முழுமையும் வாளும், ஈட்டியும், வேலும், வாளியும் கூறுபடுத்திக் குருதி சோருமாறு ஆழப்படப் பாய்ந்த உடலினன் என்றன்றோ கருத்து.

அவ்வாறு விழுப்புண்பெற்ற வீரனின் உடல் வடுக்கள் வாகைத்திணையிலக்கணத்திற்கு அரியதோர் இலக்கிய மன்றோ! அவ்வடுக்கள் மருந்துக்கான மரத்தின் மேற் பட்டையைப் பல விடங்களிலும் செதுக்கியபின், அம்மரத்தின்மேல் வட்ட வட்ட மாகக் காய்ந்த வடுக்கள் போலன்றோ இருக்கும்! அவ் வடுக் களை நாம் 'மருந்துகொள் மரத்தின் வாள் வடு' என்றே அழைக்கலாமன்றோ!

அத்தகு சிறப்புப் பொருந்திய மான வீரனை அரசன் தன் னிலைக்குச் சரியாக வன்றோ வைத்து ஆதரித்திருப்பன். ஆயி னும் அவனிடம் பெருஞ்செல்வம் இராது; எனினும் ஓரளவு குறைந்த செல்வமாவது இல்லாமலிராது.

பிறர்க்கெனவே தன் உடல்—பொருள்—ஆவியைப் பயன் படுத்தும் அவ்வீரன் வறுமையாலிவ்வுலகம் வாடுவதற்குத் தாழான்—அறிஞர்களின் அல்லல்களுக்கு ஆற்றான்—புலவர் களின் புன்கணைப் பொறுக்கான். எனவே, அவனிடம் புலவர் களும், மற்ற இலம்பாடுற்றார்களும் சென்று கண்டு செல்வ மெய்தினர்.

அவன் எவ்வாறு தன்னை இரந்தவர்களைச் செல்வர்களாக்க முடிந்தது? அதை ஒரு சிறு நிகழ்ச்சிகொண்டு விளக்குவாம்.

புலவர்களும், பாணர்களும் ஒருகால் அவனைக் கண்டு தம் புலமையைக் காட்டி நின்றனர். அவர்கள் தம் உண்ணுமருங் குல் அவ் வீரன் கண்ணுக்குப்பட்டது. 'அவர்கள் உண்ணு மருங்குலை வைத்துக்கொண்டு பெரும்புலமையைப் பயன்படுத்தி மக்கட் கவிஞர்களாக வாழமுடியாது' என்பதை நன்றாக உணர்ந்தான். அவ்வுணர்ச்சி அவர்களைக் செல்வர்களாக்க வழி கோலியது. 'கலைக்குப் பகை பசி; அப் பசி மிகுதியால் கலைபல அழிந்தொழிவது கண்கூடு,' என்பது விளங்கிற்று. உடனே தன் செல்வநிலையையும் எண்ணினான். 'பிறர் எல்லோர்க்கும் கொடுக்கும் அவ்வளவு பெருஞ் செல்வம் பெற்றிலனே' என நினைந்தான். அவ்வினைவு அவனுக்கு ஒரு நல்லுணர்ச்சியைக் கொடுத்தது. அந் நல்லுணர்ச்சியே அக்கால மக்களின் உள்ள விரிவுக்கும், அக்காலப் பொதுநோக்கு வாழ்விற்கும், இக்கால நம்மனோரின் உள்ளக்குறுகலுக்கும், ஏற்றிழி நோக்கு வாழ்விற் கும் வேற்றுமை காட்டுவது. என் செய்தான்?

தன்னூர்க் கொல்லனை இரந்தான்! எதற்காக? வேல் வடித்துக் கொடுப்பதற்காக. வேல் எதற்கு? நாட்டிலுள்ள அத்தனை ஈயாச் செல்வர்களையும் குய்யுடையடிசில் பிறர்க்கீவில் லாத் தம் வயிறருத்தும் தமிழ்ப்பண்பில்லார்களையும் கொன்று

நூழிலாட்டி, அவர்கள் செல்வங்களைக்கொண்டு அப்புலவர் பெருமக்களையும்—அறிஞர்களையும்—பாணர்களையும் செல்வர் களாக்கிக் கலை வளர்ப்பதற்காக.

எப்படி இரந்தான்? புலவர்களின் உண்ணு மருங்குலைக் கொல்லனுக்குக் காட்டி, 'இவர்களின் பசி நீங்கிக் கலை வளர, நீ நன்றாக் வேலை வடித்துக்கொடு' என்று இரந்தான். ஏன் அது செய்தல் தகாதா? அது தமிழ்த் தொண்டல்லவா? அது மட்டுமா? உலகில் ஏழையையும் பணக்காரரையும் ஒழித்து, எல்லோரையும் சரிநிகர்சமானராக்கி, 'எல்லோரும் யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என வாழச் செய்வதற் குரிய பொதுவாழ்வின் அடிப்படைத் தத்துவமுங்கூட அல்லவா?

அவ்வாறு அவ்வீரன் கொல்லனை இரந்து நின்றபோது ஆண்டு நின்ற புலவோர் அவ்வீர வள்ளலைப் பார்த்து 'பாண் பசிப் பகைஞன்' என்றல்லவோ வாழ்த்தினர்—பாராட்டினர்—பட்டமளித்தனர்.

அவ்வீரன் யாண்டிருந்தோன்? யாவன்? பாண்டிய நாட்டு* ஈர்ந்தூரின்கண் வாழ்ந்த தோயன் மாறன் என்பானே!

அப்பெருமகனின் உள்ள விரிவு எம்பெருந்தமிழ் நாட் டார்க்கு இப்போது வருமா? வந்தாலன்றோ செந்தமிழ்ச் செல்வி நாவிளையாடிக் களிப்பள்? வந்தாலன்றோ ஏற்றிழிவு மாயும்? வந்தாலன்றோ ஒவ்வொருவரும் பாண்பசிப் பகைஞர் களாக வாழமுடியும்?

வாழ்க தோயன் மாறன்! அவனை அறிமுகப்படுத்திய எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரனார் வாழ்க!

"நிரப்பாது கொடுக்கும் செல்வமு மிலனே
இல்லென மறுக்கும் சிறுமையு மிலனே
இறையுறு விழுமந் தாங்கி யமரகத்
திரும்புசுவைக் கொண்ட விழுப்புணோய் தீர்ந்து
மருந்துகொண் மரத்தின் வாள்வடு மயங்கி
வடுவின்று வடிந்த யாக்கையன் கொடையெதிர்ந்
தீர்ந்தை யோனே பாண்பசிப் பகைஞன்
இன்மை தீர வேண்டி னெம்மொடு
நீயும் வம்மோ முதுவா யிரவல!
யாந்தன் இரக்குங் காலைத் தானெம்
உண்ணு மருங்குல் காட்டித் தன்னூர்க்
கருங்கைக் கொல்லனை யிரக்கும்
திருந்திலை நெடுவேல் வடித்திசின் எனவே." (புறம்: ௧அ0).

---

* கொங்கு நாடெனவும், கோயமான் எனவும் ஆராய்ச்சியாளர் கூறுவர்.

# நந்தாமணிகள்

[கோம்பைச் சீரான்]

(1) முயற்சியில்லாதவன் கையில் பொதுநலப் பணியைத் தருவது, பேடி கையில் வீசத்தந்த வாளைப்போல் பயனற்றதாகும்.

—திருவள்ளுவர்

(2) ஒருவனுடைய ஒழுக்கத்தையும் அறிவையும் வளர்த்து, அவனைத் தன் குடும்பத்திற்கும், நாட்டிற்கும் பயன் உள்ளவனுக்ச் செய்வதே கல்வியின் நோக்கம்.

—மில்டன்

(3) அருணோதயம் சூரியோதயத்தை முன்கூட்டி அறிவிப்பதுபோல, இறையொளி இதயத்தில் உதயமாவதை அன்பும், அகத்தூய்மையும், நல்லொழுக்கமும், தன்னலமின்மையும் முன் நின்று காட்டுகின்றன.

—பரமஹம்சர்

(4) மனிதனுக்கு வேண்டியவை சிறு அளவே; அதுவும் சிறிது நாட்களுக்கே.

—கோல்டுஸ்மித்

(5) தலையிலே இடிவிழுந்தபோதிலும் சேதப்படாத வயிர உடலை எளிதாகவும், உறுதியுடையதாகவும், நேர்மையுடையதாகவும் செய்து காக்கின்ற உயிர் வேண்டும்.

—பாரதியார்

(6) தனது புதினத்தாளுக்கு ஓர் உறுப்பினரேனும் இல்லாமற்போயினும் தனது நியாயமான கொள்கைகளை ஆசிரியர் உறுதிப்படுத்தி மக்கள் மனத்தைத் தன்வயப்படுத்தி நாட்டை முன்னேற்றமடைவிக்கலாம்.

—வில்லியம் லாயிட் காரிஸன்

(7) ஒரு இனத்தின் தொகையை மற்றொன்றுக்குப் போட்டு ஒப்படைக்கும் தீய வழக்கத்தை, அடுத்த நிமிடமே பசியால் உயிர் போவதாயிருந்தாலும் கடைப்பிடிக்கலாகாது.

—விவேகானந்தர்

(8) பெரிய வேலையைக் கைக்கொள்ளல் நெடுநாள் வாழ்தலாகும்.

—பேராசிரியர் ஜோவேற்

(9) ஒருவன் தன் முயற்சியாலும் அறிவாலுமே உயர்நிலை அடையலாம்.

—நாலடியார்

(10) யாருக்குத் தாய்மொழிப் பற்றில்லையோ அவனுக்குத் தாய்நாட்டின்மீது பற்றுக் கிடையாது.

—பைரன்

(11) ஒரு நாட்டின் குடியாக வாழ்பவர் அந்நாட்டின் அரசியலிலும் மற்றத் துறைகளிலும் தமக்குள்ள கடமைகளையும், உரிமைகளையும் நன்குணருமாறு செய்தலே கல்வியின் பயனாக இருத்தல் வேண்டும்.

—பிஷர்

(12) மெய்யின்றி மொழி ஏற்படாது; மொழியின்றி அறிவு வளர்ச்சி ஏற்படாது.

—மாக்ஸ்முல்லர்

(13) நல்லவர்கள் உயர்குடியிலும் தோன்றலாம், தாழ்ந்த குடியிலும் தோன்றலாம். அவர்கள் அறிவைக்கொண்டு அவர்களை மதிக்கவேண்டுமே ஒழிய, பிறந்த குடியைக்கொண்டு மதித்தல் கூடாது.

—நான்மணிக்கடிகை

(14) யாரொருவன் தான் வலிமையற்றவன் என்று நினைக்கிறானோ அவன் வலிமையற்றவனாய் விடுகிறான்.

—பரமஹம்ஸர்

(15) நியாயம் எவ்வாறு எவர்க்கும் விட்டுக்கொடுக்காத தன்மையுள்ளதோ, அவ்வாறு என் கொள்கைகளை விட்டுக் கொடுக்கமாட்டேன்.

—காரிஸன்

(16) ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறட்பாக்களையும் படித்தறியாத ஆணோ பெண்ணோ தமிழ்நாட்டில் இருத்தலாகாது.

—வ. உ. சி.

(17) இந்த வேலையை இவனிடம் கொடுத்தால் தக்கமுறையில் நிறைவேற்றி வைப்பானா? என்று தீர ஆராய்ந்த பிறகே அவனிடம் ஒப்படைக்க வேண்டும்.

—திருவள்ளுவர்

# பாடுக பாடல்!

[நாகை. திரு. த. சிங்காரவேலன்]

பாடுக பாடல்! பாடுக பாடல்!
பண்டைத் தமிழர் பண்பா டதனை
இன்றைய நிலையில் இனிது காணப்
பைந்தமிழ் மொழியிற் பாடுக பாடல்!
முன்னாள் வாழ்ந்த முடியுடை வேந்தர்
அந்நாள் ஆற்றிய அறச்செயல் பலவும்
அவர்தம் வீரமும் அறிவுந் திறனும்
அழிவிலா அவர்தம் மானமும் பிறவும்
தேனினு மினிய தீந்தமிழ் தன்னில்
கூட்டிக் குழைத்துப் பாட்டெனச் செய்து
நாட்டு மக்களின் நல்வாழ் வதற்கே
ஈட்டிய மருந்தென இனிது தரவே
எதுகையும் மோனையும் எழிலுற அமைத்துப்
பாடுக பாடல்! பாடுக பாடல்!
முன்னோர் வாழ்ந்த சிறப்பினைக் காட்டி
இந்நாள் அவர்வழி வந்தோ ரெல்லாம்
இருந்திடும் இழிநிலை இதனையுங் காட்டி
இந்நிலை நீங்கி முன்னிலை எய்துவ(து)
எங்ஙனம் என்னும் வழியுங் காட்டி
நல்லோர் உள்ளம் நடுங்குறு வண்ணம்
நற்றமிழ் மொழியும் நாட்டர சியலும்
நலிவுறுங் காட்சி அதனையுங் காட்டி
இழந்தநம் அரசும் இனியநல் வாழ்வும்
எவ்வகைப் புதுநிலை எய்துவ தென்பதும்
அறவியல் அறிவியல் இன்ன பிறவும்
இனிதுற விளக்கி எண்ணத் திரளொடும்
இனிமையும் எளிமையும் எழிலுறச் சேர்த்தே
எழுச்சிக் கடலிடை மிதக்கும் கலனெனப்
பாடுக! பாடுக! இன்சுவைப் பாடலே!

# இன்பமெனும் ஊற்றெடுக்கும்

[ தமிழவேள் ]

கதிர்வரவால் மரைமலரும்
கார்வரவால் மயிலாடும் ;
மதிவரவால் செவ்வாம்பல்
மலர்ந்தொளிரும் எழில்விளங்க ;
நிதிவரவால் அற்பரெலாம்
நிலைமறந்து மகிழ்வடைவர் ;
பதிவரவால் மனங்களித்துப்
பாவையர்கள் தெளிவுறுவர் ; க

மக்களுடை மழலைமொழி
மகிழ்விக்கும் பெற்றோரை ;
தக்கதொரு மணவாளன்
தனைமணக்க நேர்ந்துவிடின்
எக்களிப்பால் கூத்திடுவர்
ஏந்திழையர் இல்லமெலாம் ;
திக்கனைத்தும் புகழ்பரவின்
திறல்வேந்தர் களித்திடுவர் ; உ

எழில்காட்டும் இயற்கையினால்,
இளங்குழவித் தளர்நடையால்,
பொழில்கூட்டும் இன்பத்தால்
பொங்கியெழும் கவிஞருளம் ;
தொழில்கூட்டும் அரும்பயனால்
தொழில்செய்வோர் இன்புறுவர் ;
மழைகூட்டும் கார்காணின்
மகிழ்வெய்தும் உழவருளம் ; ங

பைந்தமிழ்தான் ஆட்சிசெயின்,
பாவலர்கள் மேன்மையுறின்,
செந்தமிழர் இப்புவியில்
சிறந்துயர்ந்தால் பலர்பரவ,
நந்தமிழ்நா டெந்நாடும்
நாடுகின்ற வளம்பெற்றால்,
எந்தனுடைச் சிந்தையெலாம்
இன்பமெனும் ஊற்றெடுக்கும் ! ச

# செய்திகளும் குறிப்புக்களும்

### ஐந்தாம் தமிழ் விழா

இவ்விழா, சென்னைத் தேனாம்பேட்டைக் காங்கிரசு மைதானத்தில் புத்தம் புதிதாக விளங்கும் முத்தமிழ் நகர் எனச் சிறப்பாக அமைக்கப் பெற்ற மின்விளக்குகளாலும், அறமுறை குறிக்கும் எழுத்தட்டை களாலும், தோரணம், பூமாலை, பொன்னரிமாலை, மேற்கட்டி, வரவேற்புப் பொன்மொழி முதலிய பலவாற்றானும் அணிபெற ஆக்கப்பெற்ற பந்தற் கண் 23—9—1952 வெள்ளிக்கிழமை மாலை ஐந்து மணிக்குத் துவங்கப் பெற்றது.

தமிழார்வமுள்ள இருபால் இளைஞர் முதியோர் செல்வர் புரவலர் புலவோர் ஆள்வோர் உள்ளிட்ட பல்லாயிரக்கணக்கான மக்கள் உள்ளூர் வெளியூர் வெளி நாடுகளிலிருந்து விழைவொடும் திரண்டு அணி அணியாய் அமர்ந்திருந்த காட்சியே சென்னை என்றுங்காணாக் கண் கொளாக் காட்சியாக இருந்தது. தமிழகத்தின்கணுள்ள பல்வேறு மாவட்டங்களினின்றும் வருவித்து வகுத்துவைக்கப்பெற்றுள்ள பழம் பொருட்காட்சியும், ஆண்டடைவா யமைக்கப்பெற்றுள்ள நூற் காட்சியும், சிற்பம் ஓவியம் முதலிய பிற பொருட்காட்சியும் மிக்க வனப்பாக இருந்தன. தொண்டர்படையினர் அணிவகுத்துப் பணி வின்சொல் துணிபொடு தூய்மை வாய்மை சிறக்க வல்லவாறு வலியப்புரியும் பணியும் தமிழ்ப்பண்பை விளக்குவதாயிருந்தது.

வரவேற்புத் தலைவர் திரு. பத்தவத்சலம் அவர்கள், விழாத் தலைவர் திரு. வி. க. அவர்கள், விழாத் துவக்கத் தலைவர் திரு. சென்னை முதலமைச்சர் ஸி. இராஜாஜி அவர்கள் ஆகிய சால்பு மிக்க தக்காரோடு சால்புடைப் பெரியார் பலர் வீற்றிருந்தனர்; ஒரு சிலரை இங்குக் குறிப்பிடுவாம்.

உயர் நிலைமன்ற நடுவர் திரு. சந்திரசேகர ஐயர், சட்டசபைத் தலைவர் ஜே. சிவசண்முகம் பிள்ளை, பொருளமைச்சர், திரு. சுப்பிர மணியம், கல்வி அமைச்சர் திரு. டாக்டர். எம். வி. கிருட்டிண ராவ், ஆட்சிஇறை அமைச்சர் எம். ஏ. மாணிக்கவேலு நாயக்கர், திரு. தி. சு. அவிநாசிலிங்கம் செட்டியார், திரு. ம. பொ. சிவஞானக் கிராமணி, முறை நடுவர் திரு. பஷீர்அஹமத், திரு. இராமசாமிக் கவுண்டர், திரு. ஏ. எஸ். பி. ஐயர், செட்டி நாட்டுமன்னர் திரு. முத்தையச் செட்டியார், டாக்டர் மு. வரதராசனார், திரு. சுந்தரவடிவேல் முதலியோர் பேரவை மேடையில் பீடுடன்வீற்றிருந்தனர். பெண்பாலாருள் திருமதி. ஈ. தா. இராசேசுவரி அம்மையார், திருமதி நடேச பிள்ளை, டாக்டர் திரிபுரசுந்தரி முதலியோராவர்.

தமிழ்ப் பெருமக்களும் ஆட்சித்திறலோரும் தொன்மைத் தமிழன்னை யைப் பண்டுபோல் இன்றும் அரியணை ஏற்றும் ஆர்வமுடன் அமர்ந்

திருக்கும் பெருங்கூட்டத்திடையே விழாத்தலைவர் திரு. வி. கலியாண சுந்தர முதலியாரவர்கள் தொண்டர் கைலாகு நல்க மெல்லவந்தமர்ந்தனர். அப்பொழுது திரு. வி. க. வாழ்க! தமிழ் வாழ்க! என்னும் ஆர்ப்பொலி விண்ணளாயது.

தொடங்குவிக்குந் தலைவர் முதலமைச்சர் திரு. வி. இராசகோபாலாச்சாரியார் வந்தபோது அங்ஙனமே முழங்கப்பெற்றது. சென்னை ஆட்சித் தலைவர் திரு. ஸ்ரீபிரகாசா தமிழக உடையுடன் வந்து சார்ந்தனர். மொழி புரியாவிடினும் விழியுணர்வால் வியந்து விழாவிற்கலந்து வேட்கையொடும் வீற்றிருந்தனர்.

வரவேற்புத் தலைவர் திரு. பக்தவத்சலம் அனைவரையும் வரவேற்கும் முறையால் நீண்டதோர் பொருள்பொதி வரவேற்புரை ஒன்று நிகழ்த்தினர். அதன் சுருக்கம் வருமாறு :

நாம் தமிழை வளர்க்கும் நன்னோக்கத்துடன் கூடியிருக்கிறோம். தாய்மொழியை வளர்க்கும் பண்பால் பிறமொழியைத் தாழ்த்துகின்றோம், பகைக்கின்றோம் என்பதல்ல. எல்லா மொழியும் நல்லவாறு வளர வேண்டும். நம் தாய்மொழியாந் தமிழ் மொழி உலக மொழியுள் முதன் மொழியாகும். பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக யாதொரு மாறுபாடுமில்லாமல் உலக வழக்கு நூல் வழக்கு இரண்டிலும் ஒருங்கு நின்று நிலவுகின்றது. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னுள்ள சங்க நூற் சொற்கள் இன்னும் உலக வழக்கிற் காணப்படுகின்றன.

தமிழ்ப் பெரு வேந்தர்கள் கடல் கடந்து இலங்கை, கடாரம், மலேயா, சயாம் முதலிய நாடுகளை வென்று கைக்கொண்டது நாடாளும் நச்சு வேட்கையாலன்று. உயர்ந்த தமிழையும், தமிழகப் பண்பையும், தனி நாகரிகத்தையும் பிறரும் கைக்கொண்டு நம்போல் நன்னிலை எய்தி வாழ வேண்டுமென்னும் நன்னோக்கமேயாம்.

தமிழக எல்லை தொல்காப்பியப் பாயிரப்படி வடவேங்கடந் தென் குமரியிடை என்பது ஐயமறத் தெளிந்ததொன்று. இதனால் திருப்பதிக்கு வடக்கே ஆந்திரமொழி நாடமைந்திருந்தது தெரிகிறது. மலையாளமும் கன்னடமும் தமிழ் நாடாகவே இருந்தது. தமிழர் ஆட்சித் திறனும், ஆண்மையும், அறிவாற்றல்களும், பண்பாடும், நாகரிகமும் மிக்கவர். ஆந்திரநாடு சீர் சிறப்புற்றது தமிழ் வேந்தர்களாலேயே. அதற்கு வேண்டும் கல்வெட்டுகளும் பிறசான்றுகளும் உள்ளன.

சென்னை தமிழர்கட்கே உரியதென்பது, மொழி வரம்பாலும், மக்கட் பெருக்காலும், எல்லை முறையாலும், ஆட்சியமைவாலும், கல் வெட்டு, செப்பேடு, நூல் முதலிய சான்றுகளாலும் தெற்றெனப் புலனாகும். அங்ஙன மிருப்பவும், அடா ஆசையால் ஆந்திரர்கள் சென்னை தங்களுக்கென நடுநிலை திறம்பிக் கேட்கத் துணிவது எத்துணைப் பொருத்தமற்றதென்பதை அவர்களே பொறுத்துணர்வர். தமிழுயர்ந்த நாகரிகமுடையது; அதை உலகுக் கீந்தது : தனி வளமுடையது ; அத்தமிழை எல்லா வகையாலும் வளர்த்து உயரச் செய்து உலகுபுகழ் ஒரு மொழியாக்குவோமாக.

குறிப்பு : மற்றைய நிகழ்ச்சிகள் அடுத்த செல்வியில் விளக்கமாக வரும்.

## தூத்துக்குடி கால்டுவெல் உயர்நிலைப்பள்ளியின் ஆண்டு நிறைவு விழா

இவ்விழா மிக்க சிறப்பாக 2-9-'52-ல் தொடங்கப்பெற்றது. விழாத் தலைவர் பல்லாற்றானும் தகுதிவாய்ந்த திரு. குழந்தை, B. A. (Deputy Superintendent of Police Tuticorin) அவர்கள். தலைவர் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம்: தமிழ் மொழியின் அருமை, அறிவியல் ஆராய்ச்சி, படைப்பின் வியப்பு, மாணவர் கடமை, பண்பு கடைப்பிடித்தல், சட்டத்துக் கடங்கல் முதலியவைகளைப் பற்றித் தெளிவாகக் கூறினார்கள். திரு. ருக்மணி வேலன் அவர்கள் மாணவர்கட்குப் பரிசு வழங்கினார்கள்.

மாணவர்கள் "சட்டம் தந்த பரிசு" என்னும் நாடகத்தை மிகத் திறமையாக நடித்தனர். மாணவியர் "நடனமும்" வியத்தகு முறையில் அமைந்திருந்தது. இறை வணக்கத்துடன் விழா இனிது முடிந்தது.

## மேட்டுப்பாளையம் மாசன உயர்பள்ளி மாணாக்கர் தமிழிலக்கிய மன்றம்

மன்றத் தொடக்க விழா ஆவணித் திங்கள் கச-ஆம் நாள் நிகழ்ந்தது. பெரியநாயக்கன் பாளையம் இராமகிருட்டினர் வித்தியாலயத் தலைமையாசிரியர் திரு. வேங்கடாசலம் அவர்கள் தலைமை பூண்டார்கள். திருவள்ளுவர் திருவுருவத்தைத் திறந்து வைத்து அரியதோர் விரிவுரை ஆற்றினார்கள். கோவை, கலைக்கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு. சுப. அண்ணாமலை பி. ஓ. எல். (ஆனர்சு) 'வள்ளுவன் காட்டிய வழி' என்பது பற்றிச் சொற்பொழிவு செய்தார்கள். திரு. சுப. மணிவாசகன் நன்றியும் நாட்டுப்பண்ணும் நிகழ விழா இனிது நிறைவுற்றது.


## திருவருள் உண்மை

திருக்கழுக்குன்றச் சங்குத் தீர்த்தத்தின் பன்னிரண்டு ஆண்டுக்கு ஒருமுறை திருவருளால் ஒரு சங்கு தோன்றும். அதனைத் திருக்கோவிலாரும், ஊரவரும் மேளதாளத்துடன் மிக்க சிறப்பாக ஊர்வலஞ் செய்து திருக்கோவிலில் சேர்ப்பது வழக்கம். அம்முறையே 5—8—'52-இல் திருச்சங்கின் வரவை நோக்கி அடியார் அன்பர் ஆகிய மக்கட் கூட்டம் திரண்டு எதிர்நோக்கி யிருந்தனர். குறித்தநேரத்து வரவில்லை.

மக்கள் ஆண்டவன் அருளைநோக்கிப் பெரிதும்வேண்டி மன்றாடினர். ஆண்டவனும் அருளிரக்கங்கொண்டு இரண்டு திருச்சங்குகளை அருளினன். மக்கள் பெருமகிழ்ச்சி யுடையராய் வழக்கம்போல் சிறப்புச் செய்து திருக்கோவிலில் சேர்ப்பித்தனர்.

---

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே, அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.



திருக்குறள் சொல்லடைவு ஆசிரியர்

திரு. சாமி, வேலாயுதம் பிள்ளை, பி.ஏ., எல்.டி.